# வைத்திய
# ந்திரிகா



# वैद्यचान्द्रिका


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 17 | மன்மத— ஆனி – ஆடி | பகுதி 7 |
| Vol. 17 | July 1955. | No. 7 |

M. ஸுந்தரராஜாசாரியர், ஸ்ரீரங்கம்.

ரரத S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

வருஷ சந்தா 5—0—0

கோட்டக்கல்

## ஆர்ய வைத்தியசாலையின்

மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ணமாக குணப்படுத்துவதுடன், வைத்தியர்களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.
எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள்

எங்கள் தலைமை வைத்யர்

## ஸ்ரீ S. வாரியரை

நேராகவோ, தபால் மூலமாகவோ

யோஜனை கேட்டு பலன் அடையலாம்.

## நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

## "பாடாதி சூர்ணம்"

பல்லின் இகறில் சீ வருவது, ரத்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் இகர் சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், இகறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தைத் தேனில் கட்டியாகக் குழைத்து இகறிலும், பல்லிலும் தடவி அழுத்தித் தேய்த்து சிறிது நேரம் கழித்து வெந்நீரினால் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

*Manager,*

ARYA VAIDYASALA, KOTTAKAL P. O.,
S. MALABAR.

## கலியா பிரதர்ஸ்

(ரிஜிஸ்டர்டு)

கஸ்தூரி, இந்தியமருந்து சரக்கு வியாபாரிகள்,
ஜலந்தர்ஸிடி, பஞ்சாப். (இந்தியா)

சுத்தமான உயர்ந்த ரக கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜத், கோரோசனம், நல்முத்து, வம்சலோசனம் (மூங்கிலுப்பு), அஷ்டவர்கம், பச்சைக்கர்பூரம், தங்க வெள்ளி இலைகள், அதிவிடயம் மற்றும் நல்ல ஹிமாலய மருந்துச் சரக்குகள் எம்மிடம் கிடைக்கும்.

எங்கள் கஸ்தூரியும் குங்குமப்பூவும்
39-வது அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில்
(கோட்டக்கல், மலபார்.)
தங்கமெடல் அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றவை.
கேட்லாக் விலை விபரத்திற்கு எழுதவும்.

## KALIA BROTHERS

(REGD.)

MUSK & INDIAN DRUG MERCHANTS,
JULLUNDUR CITY, PUNJAB.

**CHANDER PRABHA VATI—**

CONTENTS :-Pure Shilajit, Gulgulu refined, Loh Bhasam, Swaran makshika Bhasam, Vanslochan, Camphor, sugar and many other drugs.

USES :- It improves memory, digestion and complexion. Useful in all sorts of urinary complaints like Nocturnal emission & Spermatorrhoea. Strengthens heart and brain. Moreover it is the best tonic of Ayurveda for young & old, men & women.

DOSE :- Two tablets twice a day in the morning and evening with hot milk or fresh water.

Price : - As. 0-12-0 Per Tola.

*Price list & Catalogue Free on application.*

We were awarded a old Medal Certificate for
MUSK & SAFFRON
by 39th All India Ayurvedic Congress,
KOTTAKKAL, MALABAR.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகை.

| தொகுதி 17<br>Vol. 17 | மன்மத— ஆனி – ஆடி<br>July 1955. | பகுதி 7<br>No. 7 |
|---|---|---|

| | பக்கம் |
|---|---|
| சேலம் மகாநாட்டில். (தலையங்கம்) ... | 3 |
| மகாநாட்டு அநுபந்தம்— ... | |
| தலைவர் பேருரை ... | 1 |
| மந்திரி மரகதம் அவர்களின் திறப்புரை ... | 21 |
| பொதுக்காரியதர்சி அறிக்கை ... | 28 |
| மஹாமண்டல வரவு செலவுகள் ... | 31 |
| நிர்வாஹஸமிதி அங்கத்தினர்கள் ... | 32 |
| தீர்மானங்கள் ... | 33 |
| மகாநாட்டுச் செய்தி ... | 35 |
| மகாநாட்டைப்பற்றிப் பத்திரிகைகள் ... | 40 |

## வைத்யசந்திரிகைக்கு

1955 வருஷச்சந்தா அனுப்பிவிட்டீர்களா?

ஆகஸ்டு மாதமுதல்

சந்தாதாரருக்குமாத்திரம் தான் வைத்ய சந்திரிகை அனுப்பப்பெறும்.

உடன் சந்தா அனுப்புங்கள்.

வி. பி யில் பெற விரும்புவர் விபரம் [illegible]

## வைத்யசந்திரிகையில்

அடுத்த இதழிலிருந்து

1. சாரீரம் [உடற்கூறு]
2. ரஸத்தின் 18 ஸம்ஸ்காரங்கள்
3. அனுபோகயோகங்கள் —நாகப்பூர் கோவர்தனசர்மா சாங்கானியின் கைமுறைகள்
4. வியாதி விஞ்ஞானம்— ஒவ்வொரு வியாதியின் நிதானமும் சிகித்சையும்

மற்றும் பல புதிய தொடர்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தாங்கள் சந்தாதாரராயில்லாவிடில் உடன் சேருங்கள்.

பொதுக் காரியதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், 27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.



आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयप्रथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

# சேலம் மகாநாட்டில்

சேலத்தில் சென்ற மாதத்தில் நடந்த 20 வது தமிழ்நாடு ஆயுர்வேத மகாஸம்மேளனம் மிகச்சிறப்பாக நடந்தேறியது பற்றி அதன் நிர்வாஹிகளும் அதில் கலந்து கொண்டவர்களும் பெரிதும் மகிழ்ச்சியடைவர். மகாநாட்டின் சிறப்பிற்கு சேலத்தின் சூழ்நிலையும் நிர்வாஹிகளின் அளவு கடந்த உற்சாகமும் வைத்யர்களின் நல்ல கூட்டுறவும் பொறுப்புணர்ச்சியும் பெரிதும் காரணமாயிருந்தாலும், நமது மத்ய ஆரோக்ய மந்திரி ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன் அவர்கள் நமது கோரிக்கையை ஏற்றபடி மகாநாட்டை ஆரம்பித்துக் கொடுத்ததும் ஒரு முக்கிய காரணமாகும். அன்னாரின் பேச்சும் மகாநாட்டில் கலந்துகொண்ட அகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தலைவருடன் ஆயுர்வேத அபிவிருத்தி திட்டங்கள் விஷயமாக கருத்துகள் பரிமாறிக்கொண்டதும், மேலும் செய்யவேண்டியவைகளைச் செய்வதாக வாக்குறுதி கூறியுள்ளதும் ஆறுதல் அளிக்கக் கூடியவையே.

அன்னாரது பேச்சு பொதுவான நோக்கில் ஆயுர் வேதத்தின் அவசியத்தை உணர்ந்து மத்யசர்க்கார் ஆவன செய்யத் தயங்கவில்லை என்பதை உணர்த்தினாலும், ஆயுர்வேத அரசியலில் ஈடுபட்டுப் பலநாட்களாக நமது சுதந்திர சர்க்காரிடம் உண்மையான ஆயுர்வேத அபிவிருத்தி திட்டங்களை எதிர்பார்த்து ஏமாந்து மனச்சோர்வடைந்த வைத்யர்களுக்கு சற்றும் ஆறுதலளித்திருக்காது. அரசாங்கம் பழைய தேசீய வைத்ய உணர்வற்ற பாதையிலேயே செல்கிறது-செல்ல விரும்புகிறது என்ற எண்ணம் தான் ஏற்பட்டிருக்கும்.

அன்னார் தமது பேச்சில் குறிப்பிட்டிருக்கும் குழப்பங்கள் எல்லாம் தகுதியற்ற ஆலோசகர்களும் அதிகாரிகளும் இந்திய வைத்ய விஷயமான நிர்வாஹிகளாக அமர்த்தப் பட்டிருப்பதால்

ஏற்பட்டுள்ளது. இவ்வடிப்படைக் கோளாறுகள் நிவர்த்திகக
படாதிருப்பதாலேயே எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்போல்
பலனற்றதாகி வருகின்றன. இந்திய வைத்யங்களுக்காக அ
சாங்கம் செய்யும் செலவு இந்தியாவில் செலவிடப்படும் சுகாதார
திற்கான செலவுகளைப் பார்க்கும்போது நூற்றில் ஒருபங்குதான்
அதுவும் வியர்த்தமாகும் நிலை ஏற்பட்டால், அதன் அடிப்படைச்
காரணங்களை யோசியாமல், அரசாங்கம் வைத்யர்களுக்கிடையே
இருக்கும் கருத்து வேற்றுமை எனும் கானல் நீர் போன்ற
என்றுமே இல்லாத ஒன்றைக் காரணமாகக் குறிப்பிட்டு வருவது
நேர்மையல்ல. ஆயுர் வேதத்தின் அடிப்படையில் ஆயுர்வேதம்
வளர அனுமதிப்பதும், தேவைக்கேற்றபடி மற்ற வைத்ய முறை
களின் உதவியை வைத்யர்களே பெற்று, தம் நிலையை சீர்செய்து
கொள்ள வசதி அளிப்பதும், ஆயுர்வேதத்தின் நிர்வாகத்தை
ஆயுர்வேத வைத்யர்களிடமே ஒப்புவிப்பதுமாக முக்கியமான
மூன்று கோரிக்கைகள் ஆயுர்வேதவைத்யம் உலக முழுவதும்
ஏகோபித்துக் கோருவது.

அலோபதி வைத்யம் சிறந்தமுறை. இந்தியாவில் அதைக் கையாளுபவர்களில் பலர் மிகச்சிறந்த சேவை செய்கிறார்கள். மற்ற வைத்யமுறைகளிடம் சம நோக்கும் மதிப்பும் உள்ளவர்களுமிருக்கிறார்கள். ஆனால் அதிகாரத்திலுள்ள அலோபதிகர்கள் இந்த நல்ல குணங்களுடன் கூடினவர்கள் எனக்கூற முடியாது. அதிகாரம் அளிக்கும் துர்மதத்தின் கூத்து இது. அவர்கள் தமது வைத்ய விஷயத்தில் எவ்வகைக்கொள்கையிலிருந்தாலும் பாதகமில்லை. ஆயுர்வேதத்தின் தலைவிதியை இவர்களைக்கொண்டு நிர்ணயிப்பது நேர்மைக்கேற்றதல்ல. இந்த நிலையில் அமெரிக்க அறிஞர் டாக்டர் வால்டர் எஸ். கிப்னிஸ் M. D, Ph. D. என்பவர் கூறியுள்ளதை ஞாபகப்படுத்தாமலிருக்க முடியவில்லை.

“மற்ற வைத்ய முறைகளின் தரத்தை நிர்ணயிக்கத்தகுதி பெற்றுள்ளதாக அலோபதியைக் கருதுவது எவ்விதம் என்பது எனக்கு புரியவில்லை. இம்முறை பலதடவை தனது சிகிச்சை வழிகளையும் மருந்துகளையும் மாற்றிக்கொண்டே வருவது நம்நாட்டு (அமெரிக்க) நாகரீக யுவதிகள் அடிக்கடி தமது ஆடை பாஷன்களை மாற்றுவதை ஞாபகப்படுத்துகிறது. இன்று மார்தட்டிப்பேசியதே நாளை பலனில்லாத ஓர் ஆசையாகக் கருதப்படுகிறது அவ்விதம் எதிர்பார்ப்பதில் தவறில்லாவிடினும், மார்தட்டிப் பேசுவது போலியாகின்றது.

தனது தரம் நிர்ணயிக்கப்பெறாத ஒன்று மற்றொன்றின் தரத்தை நிர்ணயிப்பது கேலிக் கூத்தென்ற இவ்வறிஞரின் முடிவை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவது நமதுகடமையாகும்.

॥ श्रीः ॥

हरिः श्रीगणपतये नमः ॥

अविघ्नमस्तु । श्रीगुरुभ्यो नमः ॥

श्रीधन्वन्तरये नमः ॥

कल्याणकल्पकतरुं दुःखध्वान्तदिवाकरम् ।
ज्ञानाब्धिरजनीनाथं गणनाथं भजामहे ॥

अचिन्त्यशक्तये नित्यज्ञानानन्दस्वरूपिणे ।
स्वामिनाथाय गुरवे कारुण्यनिधये नमः ॥

सर्वदर्शनदुग्धाब्धिमथनाप्तवचोऽमृतान् ।
तातपादान् भजे तद्वन्नारायणगुरूद्वहान् ॥

# 20-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின்

தலைவர்

வைத்ய வாசஸ்பதி பண்டிட், ஸ்ரீ P. S. ராம சர்மா அவர்களின்

# பேருரை.

**அன்பின் உருவாகிய பெரியோர்களே! வைத்ய சிரேஷ்டர்களே!!**

நாம் இன்று கூடியிருக்கும் இவ்விருபதாவது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்திற்குத் தலைமை தாங்கும் பொறுப்பை மறுமுறையும் என்னிடமே ஒப்படைத்திருப்பது உங்கள் அன்பின் அறிகுறியே யாகும். எனது விருப்பத்தையும் எனது திறமையையும் எதிர்பார்க்காமலே என்னை நீங்கள் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். ஸர்வசக்திக்கும் இருப்பிடமான ஆண்டவன் என்னையும் உங்களையும் நல்வழியில் செலுத்தி வெற்றி காணும்படி செய்ய வேண்டுகிறேன். நமது பெரியோர்கள் நமக்காக பலகாலம் அரும்பாடு பட்டு நமது சாஸ்திரத்தையும், நமது சங்கத்தையும் நிலைநாட்டியுள்ளார்கள். அவர்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

**வேற்றுமை வேண்டாம்; ஒற்று வாழ்வோம்.**

நமது பாரத கண்டத்தில் தொன்று தொட்டு ஆஸ்திகக் கொள்கை வேரூன்றியுள்ளது. நாம் எல்லோரும் உலகத்தைப் படைத்த ஆண்டவனின் சந்ததிகள் என்று தான் நமது சித்தாந்தம். நமக்குள் எந்த பாஷை பேசிவந்த போதிலும் அடிப்படையான கொள்கைகள் முற்றிலும் ஒற்றுமை யுடையவை. ஆதி காலம் முதல் தெய்வ வணக்கத்தில் நாம் கடவுளுக்கு முக்கியமாக சிவன், விஷ்ணு, முருகன், கணபதி, சக்தி, சூரியன் என்று ஆறு உருவம் கற்பித்து ஆறு வழிகளில் வழிபட்டு வருகிறோம். எல்லா ஹிந்துக்களும் அவரவர்கள் கொள்கையில் (மதத்தில்) சிறிது வேறுபட்டபோதிலும் அடிப்படைத் தத்வங்களில் மிக ஒற்றுமை யுடையவர்கள் என்பதற்கு நமது ஆதி நூல்களே சான்று. அது போல் நமது வைத்யங்களிலும் பேதம் கற்பிக்க முடியாது.

உலகிற்கு மும்மூர்த்திகள்போல் முத்தோஷங்கள் நமக்கு எல்லோருக்கும் பொதுவானது. இதில் சிறிதும் விவாதம் கிடையாது. சித்த வைத்தியத்திலிருந்து ஆயுர்வேதம் வந்ததா? ஆயுர்வேதத்திலிருந்து சித்தவைத்தியம் வந்ததா? என்ற வாதம், சிவன் முதலா, விஷ்ணு முதலா என்ற வாதத்திற்கு ஒப்பானது, யார் முதலாக இருந்தபோதிலும் அவர்களுக்குள் விவாதம் கிடையாது. நமக்குள்தான் விவாதம். அதுபோல் எது முதலாக இருந்தபோதிலும் உட்பொருள் முற்றிலும் ஒத்து அமைந்திருக்கிறது. நமது சரித்திரமும் ஒன்றுக்கொன்று பெருமை தரக் கூடியதாகவே அமைந்திருக்கிறது. இரு முறைகளும் கடவுளிடமிருந்து நேராக மஹர்ஷிகள் மூலமும் சித்த புருஷர்கள் மூலமும் உலகில் முன்னேறி யிருப்பதாக சரித்திரம் கூறுகிறது. பிற்காலத்தில் இரு முறைகளும் சேர்ந்து ஒரு முறை யாகவே வகுக்கப்பட்டு நாம் கையாண்டு வருகிறோம்.

பாஷை பேதத்தை மட்டும் காரணமாகக் கொண்டு இரு முறைகளுக்கும் வேறுபாடு உண்டுபண்ண முன் வருவது சரியாகாது. முத்தோஷங்களே அடிப்படையான தத்வங்கள் என்ற அம்சத்திலும், வியாதியின் பெயர், லக்ஷணம், பரிஹாரம் முதலிய அம்சங்களிலும் தற்பொழுது பிரித்துக் கூறப்படும் முறைகளில் முற்றிலும் ஒற்றுமை காண்கிறோம். ஆனால் மருந்து



செய் முறைகளில் சில நுட்பமான பேதங்கள் இருப்பது, பல காலத்து ஆராய்ச்சிகளின் பயனாக அமைந்துள்ளது பிரிவினைக்கு ஆதாரமாகா.

தமிழ் நாட்டில் பிறந்த சித்த புருஷர்கள் தமிழில் உயர்ந்த நூல்களை எழுதி, பஸ்ம சிந்தூரங்கள், ரஸவாதம், காயகல்பம் முதலிய அபூர்வ விஷயங்களை அவர்களாகக் கண்டறிந்து நமக்கும் பயன்படும்படி செய்தார்கள். அந்த சித்தர்கள் எல்லோரும் வடமொழியும் நன்கு அறிந்தவர்கள் என்பது அவர்கள் பாடல் களிலிருந்தும் சரித்திரங்களிலிருந்தும் நன்கு விளங்குகிறது. தவிரவும், தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட பல சித்தர்கள் பெயரும் வடமொழி நூல்களிலும் காணப்படுகிறது. அகஸ்தியர், திருமூலர், புலிப்பாணி முதலிய பல சித்தர்கள் இரு மொழிகளி லும் போற்றப்படுகிறார்கள். தன்வந்தரி, கௌசிகர் முதலிய முனிகளும் இருமொழிகளிலும் வணங்கும் ஆசார்ய புருஷர்களாக விளங்குகிறார்கள். பல சொற்கள் நமது பாஷைகளில் ஆதி காலம் முதற்கொண்டு பொதுச் சொற்களாக அமைந்து வழங்கப் பட்டு வருகின்றன. குடும்ப வாழ்க்கை, சமயாசாரங்கள் முதலியவைகளிலும் நாம் முற்றிலும் ஒத்து வாழ்கிறோம்.

பிறர் ஆளுகையில் பிரித்தாள ஆவல் கொண்ட சிலர் நம்மைப் பிரித்து நமது ஒற்றுமையைக் குலைத்து, அயல் நாட்டு மருந்துகளை இறக்குமதி செய்து ஏராள லாபம் அடைந்ததோடு, இன்றும் அன்றிருந்த அளவிற்கு மேலான அளவில் கொள்ளை யடித்து வருகிறார்கள். நம்மை முன்னேற முடியாமல் பல வழி களிலும் துன்புறுத்தும் கருவிகளையும் ஏராளமாக உற்பத்தி செய்து அவர்கள் மேற்கு திக்கில் மறைந்தார்கள். இரவு முடிந்தது; சந்திரன் மறைந்தான். பொழுது விடியும்; கதிரவன் ஒளி வீசும் என்று எண்ணினோம். அது நடு நிசியில் மறையும் அஷ்டமீ சந்திரன் என்று பிறகுதான் அறிந்தோம். நடு நிசியில் சந்திரனும் மறைந்தான்; பயங்கரக் கருவிகளுக்குக் கொண்டாட் டம். நல்லிருளில் நமது மதத்தின் பெருமைகளையும், சாஸ்திரங் களின் உண்மைகளையும், தேசத்தின் புனிதத்தன்மைகளையும், மஹர்ஷிகளின் ஞான உபதேசங்களையும், சித்தர்களின் சாதனை களையும் எல்லாவற்றையும் புறக்கணித்து, மேனாட்டு மோக

வலையில் அகப்பட்டு இஹ பர இன்ப வாழ்க்கையை முற்றிலும் அடைய முடியாத நவ நாகரிக வெள்ளத்தில் தள்ளிக் கடல் சேரும் படலத்தில் நாம் தற்பொழுது இருந்து வருகிறோம். இந் நிலைமையிலும் சில மஹாபுருஷர்கள் தீபங்கள்போல் பிரகாசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் பக்கத்தில் நெருங்கி தெளிவடைகிறவர்கள் மிகவும் சிலரே. வேண்டாம், இவ்விருண்ட கண்டத்தில் நமக்குள் வேற்றுமை வேண்டாம். பலர் காலில் மிதிபடாமல் விடிகிறவரையிலும் ஒத்துழைப்போம். பிறகு பகுத்தறிவையடைந்து ஒத்து ஒரே குடும்பமாக வாழ்வோம். பிளவு மனப்பான்மை பெரும் தீங்கையே விளைவிக்கும்.

**ஏமாற்ற வாழ்க்கை அல்லது இலவு காத்த கிளி.**

வாழ்க்கையில் நாம் மிகவும் ஏமாற்றத்தை அடைந்து வருகிறோம். சிலர் நம்மை ஏமாற்றி அழித்துவிடவே கர்சம் கட்டிக் கொண்டு போராடுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளாமல் ஏமாற்ற வெள்ளத்தில் மூழ்கிவிட்டோம். கரை காண்பது கஷ்டமாகத் தோன்றுகிறது. பக்ஷபாத மில்லாமல் தற்காப்பு வேலையில் ஈடுபடவேண்டிய அரசாங்கமும் துரதிர்ஷ்டவசமாக நமது நிலைமையையும் நமது பெருமையையும் உணராமல் எதிரிடையான சக்திகளின் செல்வாக்கிற்கே செவி சாய்க்கிறது. மாகாண அரசாங்கமும் நமக்கு சாதகமில்லை. மத்திய அரசாங்கமும் நமக்கு சிறிதும் அனுகூலமாக நடப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கத்தின் சுகாதார மந்திரியின் கொள்கையைக் குறித்து 1955-ஆம் ஏப்ரல் மாதத்து ஆயுர்வேத மஹாசம்மேளனப் பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது. அதாவது ;—"எல்லா ஆயுர்வேத உலகமும் அறிந்ததே— ராஜகுமாரி அமிர்தகௌர் இந்திய வைத்தியத்திற்கு முற்றிலும் எதிரிடையானவர் என்பது. அதுமட்டுமல்ல ; இந்திய வைத்தியத்தை ஒழித்துக்கட்டுவதற்கு புதிது புதிதான வழிகளைத் தேடிக்கொண்டே இருக்கிறார்" என்று. இதைப் பார்க்கும்பொழுது நாம் மத்திய அரசாங்கத்தில் எதையாவது எதிர் பார்த்தால் ஏமாற்றத்தைத்தான் அடைய முடியுமே யல்லாமல் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

மாகாண அரசாங்கத்தைக் குறித்தோ சொல்லவே தேவையில்லை. நமது உரிமைகளை எல்லாம் பறித்து, நம்மைத் தலை



யெடுக்க முடியாமல் செய்தாய்விட்டது. நமக்கென்று ஏற்பட்டது சென்னையில் ஓர் பள்ளிக்கூடம். பல நாள் பல பெரியோர்களின் முயற்சியால் பனகல் ராஜா அவர்கள் தியாகத்தின் உருவாக அப் பள்ளிக்கூடம் ஏற்பட்டது. அப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் பொழுது மகான் K. G. நடேச சாஸ்திரிகள், எனது குருநாதர் ஸ்ரீமான் பண்டிட் நாராயணய்யங்கார் போன்ற சிலரைத் தவிர எல்லோரும் மனப்பால் குடித்தார்கள். தீர்க்கதர்சிகளான இவர்கள் மட்டும் அப் பள்ளிக்கூடம் இந்திய வைத்தியத்தின் அழிவிற்காகவே தோன்றியுள்ளது என்று அன்றே கண்டு வருந்தினார்கள். 'ஆசை வெட்கம் அறியாது' என்ற பழமொழிப்படி இந்திய வைத்தியம் அபிவிருத்தி யடையப்போகிறது என்று கனவு கண்ட நாம் இன்று முற்றிலும் ஏமாற்றமடைந்தோம். நமது கனவு பகற்கனவாகிவிட்டது. பல ஹித சத்ருக்கள் தோன்றி மேநாட்டு நாகரிகத்திற்கும் படிப்புக்கும் அடிமையாக அப்பள்ளிக் கூடத்தைச் செய்துவிட்டார்கள். என்ன அநீதி! இந்திய வைத்தியத்திற்காக ஒதுக்கிய பணம்; பல கமிட்டிகள் இந்திய வைத்தியத்தை தனிப்பட்ட முறையில் வளர்க்க சிபார்சு செய்துள்ளன; பல அறிவாளிகள் இந்திய வைத்தியத்தை அவியல் முறையில் போதிப்பது ஆபத்தானது—என்று அன்று முதல் இன்று வரையிலும் முறையிட்டிருக்கிறார்கள். எல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' மாதிரி ஆகிவிட்டது!!

பள்ளிக் கூடத்தின் ஆரம்ப காலத்தில் நோக்கம் என்ன? தற்பொழுது நடப்பது என்ன? ஆரம்பத்திலிருந்தே சுத்த இந்திய வைத்தியத்தையே போதிக்க ஏற்பாடாயிருந்தால் இந் நிலைமை வந்திராது. அவசர சேவைக்கு வேண்டிய ஆங்கில வைத்திய ஞானமும் இருக்கட்டும்—என்று அன்று சிலர் நினைத்ததின் விளைவு இன்று என்ன ஆயிற்று? முற்றிலும் ஆங்கில வைத்திய போதனையல்லவா அப் பள்ளியில் நடக்கிறது. முற்றிலும் ஆங்கில சிகிச்சை யல்லவா அப் பள்ளியில் பயின்ற பல மாணவர்கள் செய்து வருகிறார்கள். இதைப் பார்த்து உண்மையான அனுதாபிகள் எவ்விதம் சும்மா இருக்க முடியும்? தவறான வழியில் போகும் அப் பள்ளி நமக்கு எதற்காக? சென்னையில் இரண்டு ஆங்கில வைத்திய கலாசாலைகள் இருக்கின்றன. அவை போதாமல் மூன்றாவதும் ஒன்று ஏற்படுத்த வேண்டு

மென்றால், அதற்கு நமக்காக ஒதுக்கிய பணம்தான் கிடைத்ததா? ஆங்கில வைத்தியத்திற்கு பல ஊர்களில் புதுப் பள்ளிகள் திறந்திருக்கிறார்களே; திறக்கவும் போகிறார்களே! இந்த ஒரு பள்ளியாவது நமது மாகாண அரசாங்கத்தின் காருண்யத்திற்கு இலக்காக இருந்து இந்திய வைத்தியத்தை அபிவிருத்தி செய்யும், முறையில் ஏன் நடத்தப்படக்கூடாது? இந்திய வைத்தியம் படித்தவர்களுக்கு ஆங்கில வைத்திய அறிவு வேண்டுமானால் பிற்காலப் படிப்பு (post Graduate Study) முறையில் போதிக்க ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது?

'இந்திய வைத்திய கலாசாலை' என்று லேபிள் போட்டு விட்டு, உள்ளுக்குள் இந்திய வைத்தியத்தையே ஏளனம் செய்யும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் சேர்த்து கேலிக் கூத்தான ஒரு வேலையல்லவா நடக்கிறது! இம்மாதிரியான ஏமாற்ற வேலையை எவ்விதம் பொறுக்க முடியும்? இது எதற்காக? நடு நிலைமையில் யோசிக்க வேண்டாமா? ஒரு பக்கமான போக்கு நியாயமாகுமா? ஜனங்கள் பணத்தை வாங்கி அவர்களுக்கு சாதகமான முறையில் செலவு செய்வதல்லவா ஜனநாயகத்தின் நோக்கம். இதை நமது சுகாதார மந்திரி சிந்திக்கிறாரா? பம்பாய் மாகாணத்தில் இந்திய வைத்தியத்தை தனிப்பட்ட முறையில் போதிப்பதைப் பார்த்து நமது சுகாதார மந்திரி என்ன சொன்னார்? பம்பாய் மாகாணத்தைக் குறைகூறினாரே யல்லாமல், வரும் காலத்தில் படுமோசமாகும் தனது மாகாணப் போக்கை யோசித்தாரா? நாளைக்கு ஆந்திராவில் எப்படி நடத்தப்போகிறார்கள் என்பதையாவது சிந்தித்தாரா? வங்காளத்தில் எப்படி நடத்துகிறார்கள் என்று அறிந்துகொண்டாரா? வங்காள மந்திரி சென்னையில் பேசியதையாவது பத்திரிகையில் படித்தாரா? சமீபத்தில் ராஜாஜியும் ஆங்கில வைத்தியம் போதிப்பதனால் இந்திய வைத்தியத்தில் கவனக்குறைவு ஏற்படுவது மிகவும் அபாயம் என்பதை விளக்கிப் பேசியுள்ளார்.

இம்மாதிரி உண்மையறிந்த பல மேதாவிகளும் அபிப்பிராயப் பட்டு வருகிறார்கள். இதெல்லாம் நமது சுகாதார மந்திரியின் மனதில் புகுந்து ஏன் வேலை செய்யாமல் இருக்கிறதோ! தற்பொழுது நடத்தப்படும் முறையில் இந்திய வைத்திய



கலாசாலை நடத்தப்பட்டால் நமது ராஜ்யத்தில் சுதேச வைத்திய ஒழிப்புத் திட்டம் கூடிய சீக்கிரம் கைகூடிவிடும். வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த நமது சிலரின் காட்டில் தற்பொழுது நல்ல மழை பெய்கிறது. அவர்களுக்கு சுபிக்ஷம் வரவேண்டாம் என்று நாம் கருதவில்லை. ஆனால் நமது காட்டிலும் சிறிது மழை பெய்து நமக்கும் சிறிது சுபிக்ஷம் ஏற்படக்கூடாதா என்றுதான் நாம் வாதாடுகிறோம். கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை. இந்திய வைத்தியத்திற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டும் அதை மதிக்காமல் விபரீத முறையில் போவதற்கு யார் ஜவாப்தாரி என்று சிந்திக்க வேண்டாமா?

## தகாத பிரிவினை.

நம்முடன் ஒத்து வாழ்ந்து உயர்வடைய வேண்டிய ஒரு சாரார் நம்மை ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினராகச் செய்து விட்டார்கள். இது முற்றிலும் வருந்தவேண்டிய விஷயம்; தகாத காரியமும் கூட. A, B என்ற கிளாஸ் பிரிவினை ஏற்படுத்தி ஏற்றத் தாழ்வை வேரூன்றச் செய்து, நம்மை விலக்கித் தாங்கள்தான் ஸர்வஜ்ஞர்கள் என்று மார் தட்டுகிறார்கள். ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி அவர்கள் சுகாதார மந்திரியாக இருந்த காலத்தில் இவ்வநீதிக்கு ஒரு பரிஹாரம் கண்டோம். ஆனால் அது கானல் நீர்போல் மறைந்து விட்டது. பிரகாசம் மந்திரிசபை அதிக காலம் நீடிக்காதது நமது துரதிர்ஷ்டமேயாகும். ருக்மணி லக்ஷ்மீபதியின் அதிகாரம் மறைந்ததும் உடனடியாக மறுபடியும் பகிரதபிரயத்தனம் செய்து A, B பிரிவினையைக் கொண்டு வந்தார்கள். இது எதற்காக? L. I. M., G. C. I. M. முதலிய பட்டங்கள் இவர்களின் யோக்யதாம்சத்தை வெளிப்படுத்தவில்லையா? வகுப்பு பேதம் ஒற்றுமையைக் குலைத்து விட்டது. சமரஸ மனப்பான்மையை அழித்து விட்டது. இதுதான் ஒற்றுமையை வளர்க்க பேரிகை தட்டும் சுதந்திர அரசாங்கத்தால் நாம் அடைந்த சுகம்.

இன்னும் ஏதோ ஒரு மசோதா வரப்போகிறதாம். அது வந்தால் நிலைமை என்ன ஆகுமோ அறியோம். நன்மை ஏற்படாது என்பது மட்டில் திண்ணம். நம்மை திக்கற்றவர்களாக்கச் செய்யப்படும் சூழ்ச்சியே வரப்போகிற மசோதாவின்

நோக்கம் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆண்டவன் தான் பாதுகாக்க வேண்டும்.

## சூழ்ச்சி பலித்தது.

இந்திய வைத்தியம் கல்லூரி மூலம் அபிவிருத்தி யடையாவிடினும் தனிப்பட்ட பண்டிதர்கள் மூலம் கூட அபிவிருத்தி யடைய முடியாமல் பல சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன. அதில் முக்கியமானது ஒன்று பலித்துவிட்டது. குருகுல முறையில் சுதேச வைத்தியம் அபிவிருத்தி யடையக்கூட அரசாங்கம் இடம் கொடுக்கவில்லை. இதனால் என்ன கஷ்டம் வந்து விட்டதோ! இந்திய வைத்திய அறிவு பெறத் தகுந்த பயிற்சியுடைய குருக்கள் அரசாங்கத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டு, அவர்களிடம் கல்வி பயின்று, தகுதியான காலத்தில் பரீக்ஷை மூலம் சன்னது வழங்கலாம் என்று ஒரு யோஜனை இருந்தது இது உண்மையில் நல்ல யோஜனை. இதனால் தலைமுறை தலைமுறையாக வந்த பல அபூர்வ விஷயங்கள் பாதுகாக்கப்பட வசதியிருந்தது. இதற்காக குருவாகத் தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுக்க ஐந்து ரூபாய் பணம் கட்டி மனுச் செய்யும்படியும் சொன்னார்கள். பல பழுத்த வைத்திய நிபுணர்கள் தங்களது ஆராய்ச்சிகள் வீண் போகாமலிருப்பதற்கு ஒரு வழி பிறந்ததாக நினைத்து குதூகலமுற்றார்கள். தங்களை அங்கீகாரம் செய்துகொள்ள பணம் கட்டி மனுவையும் அனுப்பினார்கள். இதை நம்பி நல்ல மாணவர்களையும் தங்கள் தங்கள் வைத்திய சாலையில் பயிலவும் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் இதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது. இம் முறைக்கு இடம் கொடுத்தால் B கிளாஸ் வைத்தியர்கள் வளர்ந்து விடுவார்களே என்று சிலர் வருங்காலத்தைக் கண்டறிந்தார்கள். அது அவர்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தரக்கூடியதாகத் தோன்றிற்று. தற்பொழுது அரசாங்கத்தில் செல்வாக்கும் அதிக பலமும் அவர்கள் கையில் இருக்கிறதல்லவா? நாம் ஸெண்ட்ரல் போர்டு தேர்தலின் பொழுது விட்டுக்கொடுத்து உதவிய பயனாக நமது வைத்தியத்தின் பரம்பரை முறைகள் மறைந்துவிட ஏற்பாடு செய்து விட்டார்கள். குருகுல முறை கூடாது என்று கூறி விட்டார்கள். விருந்துண்ணக் கூப்பிட்டு வெளியேற்றிய மாதிரியில் நாம் ஆசாபங்கத்தை யடைய நேர்ந்தது. கட்டின பணத்தை திருப்பி வாங்க மனுச் செய்யும் கட்டத்திலிருக்கிறோம்.



மேலும், நமது தேசத்தில் பதிவு செய்துகொள்ளத் தகுதியுடைய பல வைத்யர்கள் பதிவு செய்துகொள்ள முடியாமல் தொழில் நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று பல காலமாக அரசாங்கத்தை வேண்டி வந்தோம். இன்னும் ஒரு சந்தர்ப்பம் தரக்கூடுமென்று எண்ணி பலர் பணம் கட்டி மனுச்செய்தார்கள். வருஷைக்கணக்காக பணத்தையும் வைத்துக்கொண்டு மனுக்களையும் பரிசிலனை செய்யாமல் பதிவு செய்துகொள்ள முடியாது என்று மறுத்து விட்டார்கள். பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாக குறித்த காலத்தில் மனுச்செய்தும் பலருக்கு திரும்பி வரவில்லை என்றும் தெரிகிறது. இதுவும் B வகுப்பு வளரவிடாமல் செய்ய ஒரு சூழ்ச்சியாகவே தெரிகிறது. இல்லாவிடில் சுதந்திரம் கிடைத்ததற்காகவாவது நமது அரசாங்கம் மற்றொரு சந்தர்ப்பம் தந்து விட்டால் என்ன கொள்ளை போய்விடும்? எல்லாம் பிடிவாதமான சிலரின் சூழ்ச்சி யென்றே கருதவேண்டும். வாதத்திற்கு மருந்து கண்டோம்; பிடிவாதத்திற்கு காண முடியவில்லை.

## ஆராய்ச்சியின் அவசியம்.

நமது வைத்தியத்தில் சரியான முறையில் ஆராய்ச்சி நடத்த வேண்டியது மிகவும் அவசியமானது. மேனாட்டு விஞ்ஞான முறையில் (Modern Science) ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்று சொல்வது ஆங்கில வைத்திய ஆராய்ச்சியாகுமே யல்லாமல் சுதேச வைத்திய ஆராய்ச்சியாகாது. இது விஷயமாக சென்ற ஏப்ரல் 16-ம் தேதியில் லக்ஷ்மணபுரியில் நடந்த அகில இந்திய ஆயுர்வேத கவுன்ஸில்கள் மகாநாட்டைத் திறந்து வைத்த உத்தரபிரதேச கவர்னர் டாக்டர் K. M. முன்ஷி கூறியுள்ளதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்:

> "தேசத்தில் ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நடத்தும் பொருட்டு பிரபல ஆயுர்வேத வைத்திய நிபுணர்கள் அடங்கிய ஒரு மத்திய கவுன்ஸிலை ஏற்படுத்த வேண்டும் என்றும், ஆயுர்வேத ஆராய்ச்சி சரிவர நடத்தப்பட்டால் நல்ல பலன் அளிக்கும் என்றும், தகுந்த ஆயுர்வேத நிபுணர்களின் உதவியில் ஆயுர்வேத ஆராய்ச்சி நடத்தவேண்டும்" என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"ஆயுர்வேத ஆராய்ச்சிக்கு உதவி செய்து கொண்டிருப்பதாக சமீபத்தில் மத்திய சர்க்கார் தெரிவித்தது. உண்மையில் மேனாட்டு வைத்திய முறைக்கு பயன் படுத்தும் பொருட்டே சில ஆயுர்வேத மூலிகைகளின் பரிசோதனை நடந்தது. இது ஆயுர்வேத ஆராய்ச்சி ஆக மாட்டாது, மேனாட்டு வைத்திய ஆராய்ச்சியே யாகும். தனி ஆயுர்வேத முறைக்காகவே ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும்."

"பல நூற்றாண்டுகளாக ஆயுர்வேத வைத்தியம் தழைத்தோங்கி வளர்ந்து வந்திருக்கிறது. மேனாட்டு வைத்திய முறைகளின் மோகம் ஏற்பட்ட பின்னர் ஆயுர்வேத வைத்தியம் அலக்ஷியம் செய்யப்பட்டு வருகிறது. சென்ற 150 வருஷங்களாக மேனாட்டு வைத்திய முறையின் ஆராய்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டு வந்திருக்கிறது. சர்க்கார் உதவியும் தனிப்பட்டவர்களின் நன்கொடைகளும் கணக்கில் அடங்கமாட்டா. ஆயுர்வேதமோ ஒரு பிச்சைக்காரனைப்போல ஆதரவு தேடி பரிதாபமாக நின்று தவிக்கிறது. எனினும் ஆயுர்வேதமே நமது மக்களுக்கு இன்றும் சிறப்பாக சேவை செய்து வருகிறது என்பது மறுக்க முடியாதது."

இம்மாதிரி இந்திய நூல்களின் மேன்மையை யறிந்த ப[illegible] மேதாவிகளும் கூறியுள்ளார்கள்.

நமது வைத்தியத்தை பஞ்சபூதத்த்வங்கள், ரஸவீர்[illegible] விபாகங்கள், குணபாட நூல்கள், தந்திரகிரந்தங்கள், ரஸவா[illegible] நூல்கள், சித்த புருஷர்களின் உபதேசங்கள், மூலிகைக[illegible] தகுதியான காலதேசத்தில் பரிசுத்தமான தயாரிப்பு முறையி[illegible] மந்திரங்களின் சாதனைகளுடன் உபயோகிக்கும் வழிகள், இ[illegible] மாதிரியான பல சாஸ்திரீய வழிகளைப் பின் பற்றியே ஆராய்ச்[illegible] நடத்தப்படவேண்டும். நமது மூதாதைகள் இம்மாதிரி ஆராய்ச்[illegible] நடத்தியே நல்ல மருந்துகளையும், உயர்ந்த புத்தகங்களையும் தயா[illegible] செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக, தஞ்சை ஸரஸ்வதீ மஹாலிலிருந்து ஸ்ரீ. S. V[illegible] ராதாகிருஷ்ண சாஸ்திரிகளால் பதிப்பிக்கப்பட்ட "ஆனந்[illegible] கந்தம்" என்ற நூலைப் பார்த்தால் நமது ஆராய்ச்சி வழிகளு[illegible]



அதன் பயன்களும் நன்கு தெரியவரும். அதே மாதிரி தஞ்சையில் சரபோஜி மஹாராஜாவின் "முத்திரை"களுடன் கூடிய பல மருந்துகள் தயாரிக்கப்பட்டு அந்நாளில் பல கொடிய நோய்களைத் தலையெடுக்க முடியாமல் செய்திருக்கிறார்கள். சிந்தாமணி, த்ரைலோக்ய சிந்தாமணி, வான்மெழுகு போன்ற பல அபூர்வ மருந்துகள் இன்றும் பலவைத்தியர்களிடத்தில் இருந்து வருவதனால்தான் இவ்வளவு நெருக்கடியான காலத்திலும் கூட பெயர் வாங்க முடிகிறது. மூலிகைகளையும், தாதுப் பொருள்களையும், சித்தர்கள் நூல்களையும், ஆயுர்வேத நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு சாஸ்திரீய வழியில் ஆராய்ச்சி நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இம்மாதிரி விரிவான ஆராய்ச்சி நடத்தினால் எல்லா நோய்களுக்கும் சரியான பரிஹாரம் காண்பதுடன் ஆத்மீகமான வழியிலும் முன்னேற்றம் அடைய முடியும்.

மருந்துகளில் மட்டுமல்ல; வியாதிகளிலும் ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும். தகுந்த மருந்துகள் தற்பொழுது இல்லாமலில்லை, ஆனால் வியாதியை சரியானபடி கண்டறியும் திறமை முன் காலத்தில் அதிகம் இருந்து. தற்பொழுது அது குன்றியுள்ளது. நமது சாஸ்திரம் ஹேது, லிங்கம், ஔஷதம் என்று மூன்று பிரிவுகள் அடங்கியுள்ளது. அதில் ஹேது என்றால் காரணம். ஆகாரம், தேசம், காலம் முதலியவற்றால் கெட்டுப்போன பஞ்ச பூதங்கள் சரீரத்தில் வியாதிகளுக்கு எவ்விதம் காரணமாகின்றன என்பதைக் குறித்து இந்த பாகம் விசேஷமாகக் கூறுகின்றது. இரண்டாவது பிரிவான லிங்கம் வியாதிகளின் குறிகளைக் குறிப்பிடுகின்றது. இது ஆரம்பக்குறி, இது முன்குறி, இது கடுமை நிலைமைக் குறி, இது அஸாத்தியக்குறி, இது சாத்தியக்குறி முதலியவற்றை தெளிவாகக் கூறுகிறது. இந்த பாகத்திற்குத்தான் Pathology என்று மேனாட்டு வைத்திய முறையில் கூறப்படுகிறது.

இவ்விரு பிரிவுகளிலும் ஆராய்ச்சி நடத்தி வியாதிகளின் சரியான நிலைமைகளையும் காரணங்களையும் கண்டுபிடிக்கும் திறமை வைத்யனுக்கு ஏற்படும்படி செய்யவேண்டும்.

மூன்றாவது பிரிவாகிய ஔஷத ஸ்கந்தத்தில் சில முக்கிய விஷயங்களையும் [illegible] "Scientific" என்று ஒரு பதத்தைப் பே[illegible] நம்மை சிலர் மிரட்டு[illegible]ர்கள். அது ஆங்கில

18828

பதம். நாம் அதை சாஸ்திரீயம் என்று கூறுகிறோம். பஞ்ச பூதங்களின் விசேஷ ஞானமே விஞ்ஞானம் என்று சொல்லப்படுகிறது. இது நாம் நன்கு அறியவேண்டிய விஷயமே. இதை நமது வழிகளில் நாம் அறிந்தால் நமது ஆராய்ச்சிக்கு உபயோகமாகும். அவை ஐந்து பூதங்களின் பிரிவும், சேர்க்கையும், அவற்றின் உட்பிரிவும் அவற்றின் குணங்களும், செயற்கை முறைகளால் அவற்றின் குணங்களை மாற்றுவதும் அதிக குணமூட்டுவதும், முதலிய பல விஷயங்கள் நமது சாஸ்திரங்களின் கருத்துகள். நமது விஞ்ஞானம் இயற்கை வழிகளையும் செயற்கை முறைகளையும் தழுவியே ஏற்பட்டுள்ளது. செயற்கை முறையில் மருந்துகள் செய்ய வசதி இல்லாத காலத்தில்கூட நமது வைத்தியம் இயற்கைச் சரக்குகளாலேயே முற்றிலும் நிலையில் நிற்கும் தன்மை வாய்ந்தது.

ஒரு வஸ்துவுக்கு சூடு ஏற்ற வேண்டுமானால் மின்சார சக்திதான் வேண்டும் என்று வாதிப்பதனால் அது விஞ்ஞானமாகிவிட முடியாது. அக்னி, சூரியன் முதலியவைகளாலும் அந்த காரியம் செய்ய முடியும் என்று தற்கால விஞ்ஞானம் (Modern Scientific System) பற்றி பேசுகிறவர்கள் யோசிக்கவேண்டும். கைத்தொழில்களில் தயார் செய்யப்படும் பொருள்கள் விஞ்ஞானத்துக்கு மாறானது என்று கூறமுடியுமா?

மேலும், மருந்துகளை எவ்விதம் தயார் செய்வது? அவை சரீரத்தில் எவ்விதம் வேலை செய்கின்றன? பஞ்ச பூதங்களில் எது, எந்த சரீரத்துக்குத் தேவை? எது அதிகம்? அதை எவ்விதம் சரீரத்துடன் நேராகச் செய்வது? ஒரு வஸ்துவின் ரஸம் என்ன? வீர்யம் என்ன? பிரபாவம் (அபூர்வ சக்தி) என்ன? அதில் எந்த பூதம் சேர்ந்திருக்கிறது? சுத்த பாகம் எது? அசுத்த பாகம் எது? அசுத்த பாகத்தை எவ்விதம் விலக்குவது? சுத்த பாகத்திற்கு அதிக குணம் எவ்விதம் உற்பத்தி செய்வது? எந்த ரீதியில் எவ்விதமான வஸ்து ஜீர்ணமாகி சரீரத்துடன் சேரும்? எது சேராது? அது அவசியமானால், எவ்விதம் சேரும்படி செய்வது? சேராமல் மலமாகப் போனால் எவ்விதம் கண்டுபிடிப்பது? முறை தவறி சேர்ந்தால் என்ன கெடுதல்? அதற்கு என்ன பரிஹாரம்? ஒவ்வொருவருடைய சரீரமும் எந்த



பூதத்தின் ஆதிக்கத்தையுடையது? அதன் லக்ஷணம் என்ன? அவைகளின் சுபாவம் என்ன? அவர்களின் ஆயுள் என்ன? செயற்கை முறையில் இயற்கையின் குறையை அவர்கள் எவ்விதம் பூர்த்தி செய்து கொள்வது? தாதுப் பொருள்களில் எந்த எந்த பூதங்களிருக்கின்றன? தாதுக்கள் எவ்வளவு? உப தாதுக்கள் எவ்வளவு? மூலிகைகளில் எந்த பூதம் அதிகம்? எந்த தாது சத்து சேர்ந்திருக்கிறது? அவைகளை எவ்விதம் பக்குவப்படுத்துவது? சூரியன், சந்திரன், காற்று, ஆகாயம் முதலியவைகளை எவ்விதம் உபயோகிப்பது? நமக்கும் அவற்றிற்கும் என்ன சம்பந்தம்? அதை எவ்விதம் அறிவது? நவீன வைத்யத்தில் கூறப்படும் (Radium) ரேடியம் சிகித்ஸை சூரியனிடத்திலிருந்து அடைய முடியுமானால் அதை ஏன் அடையக் கூடாது? இம்மாதிரி விஷயங்கள் நமது நூல்களில் விஸ்தாரமாகக் கூறியுள்ளதால் இந்நூல்களின் சகாயத்தால் ஆராய்ச்சி செய்து உயர்ந்த பயன் பெறலாம்.

ஆனால் அரசாங்கத்தை நம்பி நாம் சும்மாவிருப்பது ஏமாற்றத்திற்கே சமமாகும். தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி நடத்த நமக்குள் ஏற்பாடுகள் செய்து வர வேண்டும். தற்பொழுது பல தீவிர முயற்சியுடையவர்கள் பல மருந்துகளிலும் விசேஷ அனுபவம் அடைந்திருக்கிறார்கள். அதனால்தான் நமது வைத்யம் இன்றும் பொதுஜனங்களின் செல்வாக்கிற்கு இலக்காக விருக்கிறது. நமக்குள் ஒவ்வொருவரும் அவரவர்கள் ஆயுட்காலத்தில் ஏதாவது ஒரு அபூர்வ சாதனையைச் செய்தே தீருவது என்று இன்றே சங்கற்பித்துக் கொள்ளுங்கள். ஆண்டவன் நமக்கு நல்ல வழிகாட்டிப் பயன் அளிப்பாராக.

## நமது வைத்யத்தின் மேன்மை.

நமது வைத்தியம்தான் மேலானது. இது புகழ்ச்சியல்ல. சிலர் தேசீய வைத்தியம் எதற்காக? ஆங்கில வைத்தியமே போதாதா என்று எண்ணுகிறார்கள். அவர்கள் அறியாமையைக் குறித்து நாம் வருந்துவதுடன் முடிந்தவரையில் தெளிவு படுத்தவும் கடமைப் பட்டுள்ளோம்.

வைத்தியத்தின் பயன் ஆரோக்கியம்; அதாவது நோயில்லா வாழ்வு. அது இருவகைப்படும். நோய் வராமலே பாதுகாப்பது

தான் ஸன்மார்க்கத்தைப் பாதுகாக்கும் வழி. நோய்வந்த பிறகு, பரிஹாரம் செய்து கொள்வதனால் அவ்வுடலின் மதிப்பு கெட்டுப் போய் பழுது பார்க்கப்பட்ட இயந்திரம்போல் நின்று விடுகிறது; மேன்மேலும் நோய்க்கு இடம் தருகிறது. ஆகையால் நோய் வராமல் தடுக்கும் வழியை முக்யமாகக் கொண்ட வைத்தியம் தான் மேலானது. நமது வைத்தியத்தின் முக்கிய நோக்கம் வியாதிக்கு இடம் கொடுக்காமலிருப்பதே. இதனால் வந்த வியாதியைப் போக்கும் வழியில் சிறிதும் பின்தாங்கி விட்டதாகக் கருதக் கூடாது. வியாதிவராமல் பாதுகாத்தோ, வந்த வியாதிக்கு பரிஹாரம் கண்டோ, நோயில்லா வாழ்வு என்ற ஆரோக்கிய வழியிலும் நமது வைத்தியம் தனிச்சிறப்புடையது.

ஆரோக்கியம் என்றால் உடலைப்பொறுத்தவரையிலும்தான் மற்ற வைத்யங்கள் கருதுகின்றன. நமது மஹர்ஷிகளும் சித்தர்களும் உடல் ஆரோக்கியத்தைவிட மனதின் ஆரோக்கியமும் ஞானவளர்ச்சியும், அதனால் ஆத்மாவின் அஞ்ஞானம் நீங்கிய சுத்த நிலைமை வரையிலும் ஆரோக்கியத்திற்கு பொருள் கண்டார்கள்.

ஆகவே கர்மவாஸனையும் ஜன்மாந்தரமும் உண்டென்று அறிந்த அவர்கள் இவ்வுடலைப் பாதுகாப்பது மறுபிறவிக்கும் பயன் தரக்கூடிய வழியிலும், மனதின் சுத்தத்தால் கர்மபந்தங்களை ஒழித்து சுகமான நிலைமை அடையும் வழியிலும் நூல்களை அமைத்தார்கள். இவ்வுண்மையறியாத பலர் நமது வைத்தியத்தில் மந்திரம் வேதாந்தம் முதலியவை கலந்துள்ளதென்று குறைகூறி வருகிறார்கள். நோக்கம் அறியாமல் குறை கூறுகிறவர்கள் விவேகிகளாக மாட்டார்கள். ஆகவே உடலுக்குச் செய்யப்படும் சிகித்ஸை மனதையும் ஆத்மாவையும் கெடுக்கக் கூடாது; மனதிற்கு செய்யப்படும் வைத்தியம் உடலையும் ஆத்மாவையும் கெடுக்கக் கூடாது.

நமது ஆரோக்கியம் ஸ்தூலமான சரீரத்தில் மட்டுமல்லாமல் மனதிலும் ஆத்மாவிலும் சேர்ந்திருக்கிறது. இதற்குகந்தபடி ஆரோக்கிய விதிகளையும் வைத்திய முறைகளையும் நமது வைத்திய சாஸ்திரம்தான் கூறியுள்ளது. இது விஞ்ஞான ஆராய்ச்சியால் மட்டும் முடியாத காரியம். பேரறிவு பெற்ற சித்தர்களாலும்



மஹர்ஷிகளாலும் தான் முடியும். சக்ரவாகப் பக்ஷி சந்திரனை நிந்திப்பது போலவும், கோட்டான் கதிரவனைப் பழிப்பது போலவும், தன் திறமைக்குறையை அறியாமல் குறைகூறுவது நியாயமாகாது. இதனால் சந்திர சூரியர்களுடைய உபயோகமும் மதிப்பும் போய் விடாது.

முன் குறிப்பிட்ட நமது ஆரோக்கியம் முற்றிலும் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்துவதால்தான் அடையக்கூடும். பரிசுத்தம் என்றால் உடல், வாக்கு, மனது இம் மூன்றின் தூய்மையைக் குறிக்கிறது. இதுதான் உண்மையான ஆரோக்கியத்திற்கு வழி. இதையே தர்ம சாஸ்திரங்களும் இந்திய வைத்திய நூல்களும் போதிக்கின்றன. தர்ம சாஸ்திரங்களுக்கு எதிரிடையான பல வழிகள் மேனாட்டு வைத்தியங்களில் ஆரோக்கிய சாதனங்களாகக் கருதப்படலாம். உதாரணமாக, வெங்காயம், கோழி முட்டை முதலிய ஆகாரங்களும், காலை மாலை வேளைகளில் விளையாட்டு, கவாத்து முதலிய சரீரப் பயிற்சிகளும், ஸந்த்யா காலங்களில் தூக்கம், உணவு, படிப்பு முதலிய காரியங்களும் ஆங்கில வைத்தியத்தில் தடை செய்யப்படவில்லை என்று மட்டுமல்ல; இவை ஆரோக்கிய வழிகளாகக் கூட கூறப்பட்டுள்ளன. தர்ம சாஸ்திரங்களின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நமது வைத்திய நூல்கள் இவையெல்லாம் உடல் ஆரோக்கியத்தை அளித்த போதிலும் மனதிற்கு தமோ குணத்தை உண்டு பண்ணி ஆத்மீக அறிவு ஏற்படாமல் செய்துவிடுகின்றன என்று உண்மையை எடுத்துரைக்கின்றன. இம்மாதிரி பல விஷயங்களிலும் நமது பெரியோர்கள் கண்ட உண்மைகளை இக்காலத்து விஞ்ஞானத்தால் கண்டறிவது ஆகாயக்கோட்டையேயாகும். நமது வைத்தியத்திற்கு அரசாங்கத்தில் செல்வாக்கு குறையக் குறைய, மேனாட்டு முறைக்கு செல்வாக்கு வளர வளர, இன்று என்ன நிலைமை ஏற்பட்டுள்ளதோ; அதை நமது நூல்கள் இயற்றிய பெரியோர்கள் அறிய நேர்ந்தால், நம்மை மனித வாழ்க்கையில் வாழவைத்துப் பார்க்க அரும் தவம் செய்த அவர்கள் மனம் வருந்தி, கண்ணீர் விடுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. "आचारप्रभवो धर्मः" ஆசாரத்திலிருந்து தர்மம் தோன்றியது என்ற கருத்தை அறிந்த அவர்கள் நமது வாழ்க்கை தர்மத்திற்கு மாறாக ஏற்படாமல் இருக்கும்படி நமது பழக்க வழக்கங்களைத்

திட்டம் செய்து தந்தார்கள். இவை நமது தேசத்திற்கு முற்றிலும் ஒரே நாகரிகத்தையும் சகோதர மனப்பான்மையையும் வளர்க்கக் கூடியதாக இருந்தது.

ஒவ்வொருவரும் சுக வாழ்வையே விரும்புவது இயல்பு. ஆனால் அவ்வாழ்வு பெற அறநெறி தவறாமல் அவ்வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டும் என்ற தத்வத்தை நமது வைத்திய நூல்கள் ஆரம்பத்திலேயே வற்புறுத்துகின்றன. ஆகவே உண்மையான ஆரோக்கிய வாழ்க்கைக்கு வேண்டிய ஆகாராதிகளையும் ஆசார அனுஷ்டானங்களையும் பெறுவதே பகுத்தறிவு படைத்த மனிதனின் கடமை. அதை இன்று நாம் உணரவில்லை.

ஐம்பொறிகளையும் அடக்கி மனம்போன போக்கில் போகாமல் வாழ்ந்த நாம் இன்று இந்திரியங்களுக்கு அடிமைகளாகி, "கொண்டதே கோலம் கண்டதே காட்சி" என்ற சித்தாந்தத்தில் இருந்து வருகிறோம். லோகாயதமதம் என்பது நமது தற்கால வாழ்க்கையைத் தவிர வேறொன்றிருப்பதாகக் கருதவேண்டாம்.

உடலுக்கும் மனதிற்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பரிசுத்தமான ஆகாரத்தை மிதமான அளவில் குறிப்பிட்ட தேசகாலங்களில் உண்டு, உயர்ந்த சிந்தனைகளில் ஈடுபட்டு உண்மைகாண ஊக்கம் கொண்டிருந்த நாம் தற்பொழுது கண்ட உணவைக் கண்ட இடத்தில் நினைத்த நினைத்தபொழுது தின்று திரிகிறோம். காலை மாலை நேரங்களில் குளித்து குறி வைத்துக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்து பிராணாயாமம் செய்து மனதை நிலைநிறுத்தி, ஆண்டவனின் திருவடிகளைச் சிந்தித்து ஆனந்த வாழ்வு வாழ்ந்த நாம் தற்பொழுது படுக்கையிலேயே காப்பி (Bed-Coffee) அருந்தி, பேப்பர் படித்தும் விளையாடியும் நமது அஞ்ஞானத்தை அறியாமல் விஞ்ஞானத்தைப் புகழ்ந்து காலம் கழிக்கிறோம்.

ஆரோக்கியம் தரும் கடவுள் சூரியன். கதிரவன் உதய அஸ்தமன காலங்களில் தியானம், ஜபம், அனுஷ்டானங்கள், நமஸ்காரங்கள் முதலியவைகளால் நமது மனதிற்கும் உடலுக்கும் விசேஷப் பயிற்சி அளித்து, ஒளி வடிவாகிய ஆண்டவனை வழிபடுவதால் அஞ்ஞான இருள் நீங்கி, விஞ்ஞான மோஹம் போய், மெய்ஞான ஒளிவீசி, பேரறிவு பெற்றுப் பேரின்பம் அடையும் வழிகளை



நமது நூல்கள் விளக்குகிறதா? அல்லது நவீன விஞ்ஞானம் போதிக்கிறதா? ஆரோக்கியத்தின் உண்மை உருவம் அறியாமல், உடலையும், பிராணன் இந்திரியங்கள் முதலியவைகளையும் ஆத்மாவாகக் கூறும் அஞ்ஞானிகள் போல் விஞ்ஞானத்திலும், காற்றிலும், மழையிலும், படுக்கையிலும், காப்பியிலும், டீயிலும், பானங்களிலும், காக்ஷிகளிலும், நடை உடை பாவனைகளிலும் தான் ஆரோக்கியம் ததும்பி வழிகிறதாக நினைக்கும் தற்காலப் போக்கை மாற்றித் தெளிவுபட நமது வைத்யம் தான் உண்மை வழிகாட்டும் என்பது கற்றறிந்தவர்கள் கண்ட உண்மை. உடலைச் சுத்தப்படுத்தி நோய்க்கு இடம் கொடுக்காமல் பாதுகாத்து மனதை ரஜோகுண தமோ குணங்களின் சேர்க்கை யில்லாமல் செய்து, ஸத்வகுண வளர்ச்சியால் ஆத்மஸ்வரூபத்தைக் கண்டு, கர்மபந்தத்திலிருந்து விடுதலை யடைவது வரையிலும் ஆரோக்கிய வாழ்க்கையின் பொருளாக நமது பெரியோர்கள் கருதினார்கள்.

## சுத்தத்தின் தத்வம்.

சுத்தம் அல்லது சௌசம் என்பது நமது வாழ்க்கைக்கும் ஆரோக்கியத்திற்கும் மிகவும் இன்றியமையாதது. இது தற்காலத்தில் Neatness, Antiseptic Precaution முதலிய சில சொற்களால் சொல்லப்படும் பொருள்களிலிருந்தும் மிகவும் மாறானது. ஸ்தூல உடலின் வெளிப்படையான அழுக்கு எடுத்தலையே இப்பதங்கள் குறிக்கின்றன. வியாதிகள் அபத்தியத்தினால் மட்டுமல்ல; கர்மத்தினாலும் ஏற்படக்கூடியவை என்பதுதான் நமது நூல்களின் சித்தாந்தம். அபத்தியத்தினால் உண்டாகும் நோய்களை பத்திய விதிகளாலும் உடலை சுத்தமாக வைத்துக் கொள்வதாலும் வராமல் தடுப்பதுடன் எளிதில் போக்கவும் செய்யலாம். கர்ம வியாதிகள் அவ்விதம் போகாது. அவை ஜன்மாந்தர வினைப்பயனாக சூக்ஷ்ம சரீரத்துடன் பற்றி நின்று இந்த ஜன்மத்தில் துன்புறுத்துகின்றன. அவைகட்கு பரிஹாரம் சூக்ஷ்ம சரீரத்திற்கே சுத்தம் ஏற்படக்கூடிய முறைகளில் அமைந்திருக்கவேண்டும். இதையே பிராயச்சித்தம், தவம் முதலியவைகளால் அடையவேண்டுமென்று நமது நூல்கள் போதிக்கின்றன.

நமது ஆன்மாவின் சுரூபம் ஐந்து கோசங்கள் என்ற ஸ்தூல உடலால் மறைக்கப்பட்டிருக்கிறது. இவை ஒவ்வொன்றும் அதற்குக் கூறப்பட்டுள்ள சுத்திமுறைகளால் பரிசுத்தப் படவேண்டும். அன்னமய பிராணமயாதிகோசங்களில் மருந்துகள் எவ்விதம் வேலை செய்கின்றன-முதலிய விஷயங்கள் நாம் திருவாரூரில் நிகழ்த்திய தலைமையுரையில் "ஆயுர்வேத தர்சனம்" என்ற பாகத்தில் விவரித்துள்ளோம். ஆகவே, ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுக்கு சுத்தம் ஏற்படவேண்டுமானால் நமது வைத்தியத்தில் சொல்லியுள்ள சௌச விதிகளே தகுதியானவை. எல்லா சுத்தியையும் விட திரவ்ய சுத்தியே முக்கியமானது என்று நமது கொள்கை, அதாவது நாம் சம்பாதிக்கும் தனம் நேரான வழியில் வருவதேதான் நமது சுத்தத்திற்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டுள்ளன. திரவ்யசுத்தி, ஸ்தல சுத்தி, தேச சுத்தி, கால சுத்தி, பாத்திர சுத்தி, சரீர சுத்தி, இந்திரிய சுத்தி, பஞ்சபூத சுத்தி மனச்சுத்தி, ஞான சுத்தி முதலிய சூக்ஷ்மமான பல சுத்திகளை நமது நூல்கள்தான் கூறுகின்றன.

ஸ்தூலமான சுத்தங்களிலும் சிறிதும் பின்வாங்கவில்லை. ஐந்து வித ஸ்நானங்களில் மண்ணின் உபயோகம் மிகவும் உயர்ந்தது. மண்ணின் பெருமையை சமீபகாலத்து மஹான்கள் கூட உலகுக்கு போதித்துள்ளார்கள். ஜலத்துடன் மண் சேர்த்துத்தான் நமது உடலை நாம் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இதனால்தான் உண்மையான சரீர சுத்தி ஏற்படும். மலாபகர்ஷண ஸ்நானம் (அழுக்குப் போக்கும் குளி) என்ற முறையை நமது முன்னோர்கள் கண்டறிந்த மாதிரி வேறு யார் அறியமுடியும்? பசுவின் சாணி, மஞ்சள் முதலிய வஸ்துக்கள் உயர்ந்த கிருமி நாசினிகள். இம்மாதிரி இயற்கையின் சகாயத்தாலேயே நம் முன்னோர்கள் பூர்ண சுகமுற்றார்கள். நாமும் அவர்களின் பாதையில் முன்னேற முயன்றால் ஆயுளும் ஆரோக்கியமும் ஞானமும் அடையலாம்.

## பத்திரிகை வளர்ச்சி.

தற்பொழுது உலகமே பத்திரிகைகள் மூலம்தான் நடக்கிறது என்பது மிகையாகாது. நல்ல பத்திரிகைகள் செய்யும் சேவைக்கு ஈடானது ஒன்றுமில்லை. மேனாட்டு வைத்திய முறையில் ஏராளமான பத்திரிகைகள் தோன்றி வைத்தியத்தை கண்ணாடியில் பார்ப்பதுபோல் தெளிவு படுத்துகின்றன. நம் நாட்டு முறைகளில் பத்திரிகை வளர்ச்சி மிகவும் குறைவு. அதற்கு காரணம் பல. பத்திரிகையை ஆதரிக்கவேண்டும் என்ற கொள்கை நம்மில் பலருக்குக் கிடையாது. ஆங்கில வைத்தியர்களோ வென்றால், ஒரு நாள்கூட பத்திரிகை விஷயங்களைப் பார்க்காமல் இருப்பதில்லை. நமக்குள் பத்திரிகை நடத்த தேவையான பொருள் வசதியும் சாஸ்திர அறிவுடன் அனுபவ ஞானமும் உடையவர்கள் பலர் தோன்றவேண்டும். பல பத்திரிகைகள் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் நடத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அரசாங்கத்திலும் நமக்கு செல்வாக்கு அதிகரிக்கும். ஆகையால் தற்பொழுதுள்ள பத்திரிகைகளுக்கும் நாம் பேராதரவு காட்டுவதுடன் பல உயர்ந்த பத்திரிகைகளை உண்டுபண்ணுவதிலும் முயற்சிக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் நமது நண்பர் ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் ஓர் உயர்ந்த பத்திரிகை ஆரம்பித்துள்ளதை அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

## கைராசி அல்லது தைவானுக்ரஹம்.

நமது தொழிலில் சிலருக்கு எவ்வளவு படிப்பிருந்தும் கைராசியில்லாததால் முன்னேற முடியாமல் பயனற்ற வாழ்க்கை நடத்த நேருகிறது. கைராசி என்பது தைவானுக்ரஹம். இது முன்ஜன்மத்திலேயே ஏற்பட்டிருப்பது மிகவும் மேலானது. அவ்விதம் அதிகத்திறமையையுடைய வைத்யர்களுக்குத் தான் நமது நூல்களில் "அம்ருதஹஸ்தன்" என்றும், தொட்டது துலங்காதவர்களை "தக்த ஹஸ்தன்" என்றும் குறிப்பிட்டு, அவர்களின் சாமுத்ரிகலக்ஷணங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே கைராசியை அடைவதற்கு நாம் மிகவும் பிரயத்தனம் செய்யவேண்டும். அது கடையில் விலைக்குக் கிடைக்காது; நமது சீரான நடத்தை (ஒழுக்கம்) கடவுள் பக்தி, குருபக்தி முதலியவைகளால் தான் அடைய முடியும்.

ஆகையால் நாம் எல்லோரும் ஆஸ்திகர்களாக இருந்து, ஆண்டவனின் அருளையடைய அநுதினமும் முயற்சிக்க வேண்டும்

தைவானுக்ரஹமே நமது பொக்கிஷம். அதுவே மரணநோய் நீக்கும் மருந்து. அன்பே சிவம். ஆகவே நமது அன்பின் பெருக்கால் ஆண்டவன் நம்மைக் காத்தருளும்படி பிரார்த்திப்போமாக.


नारायणाचार्यपदारविन्द-
माधुर्यसौरभ्यविकासवन्ति ।
वचांसि मांगल्यविधायकानि
जगन्ति पुण्यानि वितन्वतां मे ॥

शिवम् ।

# ஆயுர்வேதம் இந்தியாவின் பரம்பரைச் செல்வம்

**ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன் அவர்களின் மகாநாட்டுத் திறப்புரை.**

இம் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கவும் தங்களது மகாநாட்டில் கலந்து கொள்ளவும் வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள அனுமதி முதலில் கோருகிறேன். தங்களது காரியதர்சி என்னை இதற்கு அழைத்தபோது சற்று யோசித்துத் தான் இவ்வழைப்பை ஏற்றுக் கொண்டேன். பொது ஜனங்களிலொருவராகத் தங்களது ஆலோசனைகளில் நான் எவ்விதம் பங்கெடுத்துக் கொள்வதென அறியேன். தாங்கள் தங்கள் தொழில் பற்றிய விஷயங்களை முக்கியமாக ஆயுர்வேத முன்னேற்றத்திற்கான வழிகளை ஆராய இங்கு கூடியிருக்கிறீர்கள் என நம்புகிறேன். இதற்கு முன் நடந்த மகாநாடுகளில் பேசப்பட்டவைகளையும் அவைகளில் கிரியாம்சையில் கொணரப்பட்டவைகளைப் பற்றியும், மேலும் ஆயுர்வேத முன்னேற்றத்திற்கான வழி வகுப்பதிலும் தங்கள் கவனம் செல்லும் என நம்புகிறேன்.



**பல முனைகளுள்ள பிரச்னை**

அவ்வித மகாநாடுகளில் வெளியான கருத்துகளையும், அவ்வப்போது ஏற்படும் பரிணாமங்களையும் கவனிக்கும்போது ஆயுர்வேதத்தைப்பற்றிய விஷயங்களை நாம் விருப்பு வெறுப்பின்றி

சர்ச்சை செய்கிறோமா அல்லது பல முனைகளில் விரிந்துள்ள இந்தப் பிரச்னையை குறுகிய நோக்குடன் பரிசீலிக்கிறோமா என்று ஐயம் எழுகிறது. இவ்வித மகாநாடுகளில் நடக்கும் சர்ச்சைகளில் ஆயுர்வேதத்தின் முன்னேற்றத்திற்காக உருவாகும் தீர்மானங்களிலிருந்தும் யோசனைகளிலிருந்தும் அவைகளின் முக்கியக் கருத்தை அறிந்து கொள்வதே மிகக்கடினமாக இருக்கிறது. ஆக யூனானி ஹோமியோபதி, இயற்கை வைத்ய முறை, I. டிஷ்யூ ரெமெடி முறை, க்ரோமோபதி முறைகளைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் தமது முறையே தனித்து பூர்ணமான சிகித்சை முறையாக இயங்கவல்லது எனத்தன் தன் முறைகளுக்கு தனி அந்தஸ்து கோருகின்றனர் என்பதும் தாங்கள் அறிந்திருக்கலாம்.

அவ்விதமான யோசனைகள், நாம் நமது மக்களுக்கு ஒரு நல்ல வியாதி நிவிருத்தி-தடுப்பு வழியை அளிக்க முயற்சிப்பதில் குழப்பத்தை உண்டாக்குவதாக அமைகின்றன என்பதே எனது எண்ணம். ஆயுர்வேதத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் வாய்ப்பு பெற்ற பல அதிகாரிகளும் நிபுணர்களும் கொண்டுள்ள முரண்பட்ட பல கருத்துக்களே இத்தேசத்தில் ஆயுர்வேதம் நல்ல முறையில் முன்னேறுவதில் உண்மையில் தடையாக இருந்ததெனப் பலர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். அதிலும் முக்கியமாக தொழில் புரியும் வைத்யர்கள் முக்கியமான விஷயங்களில் முரண்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளதே இந்நிலைக்குக் காரணம்.

**மாறுபட்ட கருத்துக்கள்.**

ஆயுர்வேதம் வருங்காலத்தில் எவ்விதம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை இருக்கிறது. தங்களில் சிலர் பண்டைய காலத்தில், கையாளப்பட்ட கல்வி முறை-தொழில் முறைகளையே அனுசரித்து சுத்த ஆயுர்வேத வழியில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென நினைக்கிறார்கள். சுத்த ஆயுர்வேதம் என்பதின் பொருளில் யாவருக்கும் ஒற்றுமை இருக்காது. அச்சொல்லின் பொருள் நிலைப்பட்டதல்ல. விரிவாகக் கூடியதே. ஏனெனில் உலகில் கிடைக்குமிடங்களிலிருந்தும் நல்லவைகளைச் சேர்த்துக்கொள்வதே ஜனங்களுக்கு நல்ல சேவை



செய்யச் சிறந்ததென கருத்துக் கொண்டவர்களுமுளர். வேறு சிலர், ஆயுர்வேதத்தை 'நவீன' மாக்கவேண்டுமென்று கூறுகின்றனர். மற்றும் சிலர் நமது நாட்டின் பண்டைய வைத்யத்திலிருந்தும் நவீன வைத்யத்திலிருந்தும் நல்லவைகளைத் திரட்டி இணைத்த ஒரே வைத்ய சாஸ்திரத்தை உண்டாக்க வேண்டுமென உண்மையான ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கருத்துதான் சோப்ரா கமிட்டியினரும் மற்றும் பல கமிட்டியினரும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தளித்த சிபார்சு. ஆனால் இவ்விஷயத்திலும் இதை நடைமுறைக்குக் கொணர்வதில் ஒற்றுமையான கருத்தில்லை.

ஆயுர்வேதப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களின் யோக்யதாம்சங்கள் பற்றி சற்று பிரஸ்தாபிக்க ஆசைப்படுகிறேன். இது சர்ச்சைக்குட்பட்ட விஷயமாக இருந்து வருகிறது. சுத்த ஆயுர்வேதத்தைக் கற்றுக்கொள்வதற்கு விரும்பும் மாணவன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சமஸ்கிருதத்தில் நூற்றுக்கு 50 மார்க்குகள் பெற்றால் போதுமென்று சிலர் கருதுகின்றனர். இது கூட சமீபத்தில் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். டிகிரி பயிற்சி கொடுக்க வேண்டுமா அல்லது டிப்ளமாப் பயிற்சி கொடுக்க வேண்டுமா வென்பதிலும் கருத்தொற்றுமையில்லை. ஆயுர்வேதமும், நவீன வைத்திய முறையும், ஏக காலத்தில் போதிக்கப்பட வேண்டுமென்றால், அது விஷயத்திலும் இந்த இணைப்பான போதனா முறையை வகுப்பதிலோ அல்லது ஒவ்வொரு முறையின் போதனைக்குக் கல்லூரிகளில் எவ்வளவு மணி நேரம் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்பதிலோ கருத்தொற்றுமையுமில்லை. இவ்வாறு மாறுபட்ட அபிப்பிராயங்களிருப்பதனால் பிரச்னை மிகவும் குழப்பமடைந்துவிடுகிறது.

**சர்க்காரின் முயற்சிகள்.**

இச்சமயத்தில் இது விஷயத்தில் சர்க்கார்கள் என்ன செய்துள்ளார்கள் என்று தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும். நாட்டு வைத்திய முறைகளின் வளர்ச்சிக்காக திட்டவட்டமான ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக மத்திய சர்க்காராலும், ராஜ்ய சர்க்கார்களாலும் பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. இவ்வித முயற்சிகள் 1920-ம் வருஷ முதலே நடந்து வருகின்றன.

இதற்காக அவ்வருஷத்தில் சென்னை சர்க்கார் ஸர் மகம்மது உஸ்மான் தலைமையில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். மற்றும் பல கமிட்டிகள் இதன் பிறகு கூடியிருக்கின்றன. ஆயுர்வேதம் இதர நாட்டு வைத்திய முறைகளின் அந்தஸ்து, அவைகளின் போதனா வழி, அவைகளில் தேர்ச்சி பெற்றவர்களைப் பதிவு செய்வது, வைத்தியத்தொழில் துறையில் இவர்களின் அந்தஸ்து போன்ற பல பிரச்னைகள் பற்றி இக்கமிட்டியினர் திர ஆராய்ந்தனர்.

இக்கமிட்டிகளின் சிபாரிசுகள் ஏகமனதானவைகளாக விருப்பது வியப்பை அளிக்கிறது. இக்கமிட்டிகளில் பிரபல நாட்டு வைத்தியர்களும், நவீன வைத்திய முறையின் பிரதிநிதிகளும், விஞ்ஞானிகளும் அங்கத்தினர்களாக விருந்தனர். மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்ட சோப்ராக் கமிட்டி பண்டிட் கமிட்டியின் சிபாரிசுகளும், பம்பாய் ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்பட்ட யோத் கமிட்டியின் ஆலோசனைகளும் யாவருக்கும் நன்கு தெரிந்தவைகள்தான். இக்கமிட்டிகளின் சிபாரிசுகள் பற்றிய விவரங்களை நான் இங்கு ஆராய விரும்பவில்லை. ஆனால் இக்கமிட்டிகளும், இதர பல கமிட்டிகளும் நாட்டில் ஆயுர்வேதப் பயிற்சிக்காக உள்ள ஸ்தாபனங்களின் நிலைமையைப்பற்றிச் சீர்தூக்கிப் பார்த்தபின், இவைகளில் பெரும்பாலானவை நாட்டு வைத்திய முறைகள் போதனைக்கோ ஆராய்ச்சிக்கோ ஏற்ற வகையில் ஆதார வசதிகள், உபகரணங்கள் முதலியவை கொண்டவைகளாக இருக்கவில்லையென்றே அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன. இது சம்பந்தத்தில் இவ்விதமான அபிப்பிராயமிருந்தால், ஒவ்வொரு ராஜ்யத்திலும் சரியான போதனா பயிற்சி ஸ்தாபனம் ஒவ்வொன்றாவது அபிவிருத்தி செய்யப்படவேண்டியது அதி முக்கியமான விஷயமாகும். ராஜ்ய சர்க்கார்கள் இதைப்பற்றிக் கவனிக்கவேண்டும். ஆயுர்வேதத்தில் அக்கறையுள்ளவர்கள் ஆதரவும் ஆர்வமும் காட்டினால் இத்தகைய ஸ்தாபனங்கள் ஏற்படுவது இலகுவாகும்.

கமிட்டிகள் யாவும் ஆயுர்வேத யுனானி போதனா பயிற்சி சாலைகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கு பொதுக் கல்வியில் குறைந்த பட்ச ஓரளவு அடிப்படை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கின்றன. ஆயுர்வேத தத்துவங்



களை அறிய ஓரளவு புத்தி வளர்ச்சி தேவை என உணரப்பட்டது. இது விஷயமாக என்ன செய்யப்பட்டு வருகிறதென்பதும் தங்களுக்கு தெரியும். இந்த ரிபோர்டுகள் வந்த பிறகு ஏற்பட்டுள்ள பரிணாமங்களைப்பற்றியும் தாங்கள் சற்று சிந்திக்கக் கோருகிறேன்.

முறையான ஆராய்ச்சி.

விஞ்ஞான வளர்ச்சியில் நமக்குக் கிடைத்துள்ள வழி முறைகளை, விஷய அறிவைப் பயனபடுத்தி ஆயுர்வேதத்தில் முறையான ஆராய்ச்சிகள் நடததபபட வேண்டுமெனறு எல்லாக் கமிட்டிகளும் சிபாரிசு செய்திருக்கின்றன. இந்த சிபாரிசுகள் நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற இரு வருஷங்களாக ஜாமநகரில் ஒரு ஆராய்ச்சி நிலையம் வேலை செய்து வருகிறது. இப்பரிசீலனைகள் நடத்தும் பொறுப்பு முழுவதும் பிரபல நாட்டு வைத்தியர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவர்கள் ஆயுர்வேத வைத்தியத் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களின் அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆராய்ச்சியைப் பற்றிப் பேசும்போது நவீன விஞ்ஞான முறையில் செய்யப்படும் ஆராய்ச்சி வழியானது எவ்வகைப்பட்ட விஷயத்தைப்பற்றி ஆராய்வதற்கும் ஒரு வகைப்பட்டதுதான். ஆராய்ச்சி முறையில் பயிற்சி பெறாததால் பலர் இதை நன்கு உணருவதில்லை. ஒருவன் ஹோமியோபதி அல்லது இயற்கை வைத்யம் அல்லது வேறு விஷயத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று கூறுவது அர்த்தமுள்ளது. ஆனால் "ஹோமியோபதி முறையில் ஆராய்ச்சி" என்பது போன்றது அர்த்தமற்றது. அவ்வித ஆராய்ச்சி முறையே இல்லை.

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டியதின் அவசியத்தையோ, அதைப்பற்றி யோசிக்கையில் அவ்விஞ்ஞானத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், அதன் தத்துவங்களையும் அவசியம் மனதிற் கொள்ளவேண்டுமென்பது பற்றியோ யாரும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால் — மருந்துகளைப் பற்றியோ — அடிப்படைக் கொள்கைகளைப் பற்றியோ ஆராயும்போது ஆயுர்வேத ஆராய்ச்சி முறை என்று தனியாக ஒன்று இல்லை என்றே கூறவேண்டியிருக்கிறது.

ஆயுர்வேதத்தைக் கற்றறிய ஆராய்ச்சித் திறன்படைத்த மதி நுட்பமுடையவர்கள் முன்வரும்படி செய்யவேண்டியது அவசரமான விஷயம் என்று நான் கருதுகிறேன். இப்பிரச்னையில் நாம் முழு கவனத்தையும் செலுத்தி நிலைமையைச் சமாளிப்பதற்கான வழிவகைகளை வகுப்போம். இதைச் செய்வதற்கு நாட்டில் இப்பொழுதுள்ள ஆயுர்வேத ஸ்தாபனங்கள் இத்துறையில் போதனையையும் ஆராய்ச்சியையும் நடத்துபவைகளாக வளர்ச்சியுற வேண்டியது அவசியம். ஆராய்ச்சிச் சூழ்நிலையில் நமது மாணவர்கள் ஆயுர்வேதத்தைக் கற்றுணரட்டும். இவர்களில் சிலர் பின்னர் இதற்காக உண்மையான ஊக்கத்துடன் உழைக்க முன்வருவார்கள்.

நவீன வைத்திய சாஸ்திரத்தில் பயிற்சி பெற்றவர்களும் ஆயுர்வேதத்தைக் கற்றுக்கொள்ளுவதில் அதிக அக்கறை காட்ட வேண்டியதும் அவசியம். ஒருமுறை வைத்தியத்தைப் பற்றிய அறிவு மற்றொரு முறை வைத்திய ஞானத்தைப் பெற உதவியாகவே இருக்கும். ஆயுர்வேதத்துக்கு விசேஷ ஆதரவில்லாத முன் நாட்களில்கூட, நவீன வைத்திய முறையில் (மேல்நாட்டு வைத்திய) தேர்ச்சி பெற்ற பலர் ஆயுர்வேத வளர்ச்சிக்காகப் பல காரியங்கள் செய்திருக்கின்றனர் என்பதை நாம் மறக்க முடியாது. ஆயுர்வேதம் ஒரு சிலரின் தனி உடைமையான பொக்கிஷமல்ல. இது நம் நாட்டின் பாரம்பரைச் செல்வமாகும். இதை மேல்நாட்டு வைத்திய முறையில் பயிற்சி பெற்றவர்களும், இதில் அக்கறை கொண்டவர்களும் ஒரே மாதிரியான சம ஊக்கத்துடன் கற்றுத் தேர வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

சென்ற சில வருஷங்களில் மேல்நாட்டு வைத்திய முறை எவ்வளவோ முன்னேறி யிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. அவ்விதமிருந்தும் பல அலோபதி டாக்டர்களும், அலோபதி உபாத்யாயர்களும் வியாதி நிலையைத்தானே பார்த்து அறிந்து கொள்ளும் சக்தி, அந்நிலையை அறிந்துகொள்ள பல சாதனக் கருவிகள் இருப்பதால் – குறைந்துவிட்டதென்பதைப் பற்றி வருத்தப்படுகின்றனர். ஆயுர்வேதம் என்றும் விரிவாக பிரத்யக்ஷமாக அறியப்பட்ட வியாதி நிலையையும் அதன் ஆதார



மாக ஊகத்தால் கஷ்டப்பட்டு கண்டறியப்பட்ட வியாதி நிலையையும் மிகப் பிரதானமாக நம்பியிருக்கின்றது. பல தலைமுறைகளாக உள்ள வைத்தியர்களின் அனுபவங்களையும், விஷய ஞானத்தையும் ஒருங்கு திரட்டுவது நல்ல பலனைக் கொடுக்கும். இந்நிலையிலிருந்து ஆயுர்வேதத்தைப் படிப்பது பொதுவாகச் சேகரிக்கப்பட்டுள்ள வைத்ய ஞான பொக்கிஷத்திற்கு மிகவும் நல்ல மதிப்பைத் தரும் நிதிச்சேர்ப்பை அளிக்கும். அது எல்லா தேசத்து எல்லா மக்களுக்கும் உதவும். வைத்யம் என்பது ஸர்வ தேசியம் என்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளக் கூடியதே.

**ஜாம்நகர் ஆராய்ச்சி நிலயம்**

நமது லட்சியங்கள் பூர்த்தியடைவதற்காக, சௌராஷ்டிர ராஜ்ய சர்க்காரின் கூட்டுறவுடன் மத்திய சர்க்கார் ஓர் ஆராய்ச்சி நிலயத்தை ஜாம்நகரில் ஏற்படுத்தியுள்ளனர். இதில் ஆயுர்வேதப் பட்டதாரிகளும், மற்றவர்களும், ஆயுர்வேதத்தின் பல அம்சங்களைப் பற்றியும், தீவிரப் பரிசீலனைகள் நடத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்நிலயம் ஏற்கெனவே இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலயத்துடன் சேர்ந்து வேலைகள் நடத்தி வரும். இந்நிலயங்கள் வெற்றிகரமாகப் பணியாற்ற யாவரும் உதவி புரிய வேண்டும். அனாவசியமான சர்ச்சைகளில் நாம் ஈடுபடுவதை விட்டு, நிர்மாண முயற்சியின் மூலம் ஆயுர்வேதம் இன்றுள்ள வைத்யத்துறைக்குத் தனது அரிய பொக்கிஷமான ஞானத்தை அளித்து உதவுமாறு ஈடுபடுவோமாக.


## மஹாமண்டல வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. | திரட்டு வாகடம் | 0—6—0 |
| 2. | சித்தர் முறை | 0—12—0 |
| 3. | சிகித்ஸா கலிகா ,, | 0—14—0 |
| 4. | பழைய வைத்ய சந்திரிகை பிரதிகள் ஒரு வருஷத்தியது | 2—0—0 |

தபால் செலவு தனி. வி. பி. கிடையாது. முன்பணமும் அனுப்பவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27. சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# சேலம் மகாநாட்டில்

### மகாமண்டலப் பொதுக்கார்யதர்சி,

### ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் ஸமர்பித்த

## 1954—55 ஆண்டறிக்கை.

அன்பார்ந்த தலைவர் அவர்களே,

நிர்வாஹஸமிதி அங்கத்தினர்களே, ஸபையோர்களே!

சென்ற ஆண்டு மஹாஸம்மேளனத்தில் பொதுக்காரியதர்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ A. ராகவராவ் அவர்கள் சில தினங்களில் சில அசௌகர்யங்கள் காரணமாகத் தமது பதவியை ராஜினாமா செய்த உடன கோட்டக்கல்லில் நடந்த விசேஷ நிர்வாஹ ஸமிதிக்கூட்டத்தில் மறுபடியும் தங்களது ஆதரவாலும் அளவற்ற அன்பாலும மூன்றுவது தடவையாகப் பொதுக்காரிய தர்சியாக நமது மஹாமண்டல ஸேவையில் ஈடுபடுத்தப்பட்டேன். வேறு சில விசேஷப் பொறுப்புகளும், முக்கியமாக வைத்ய சந்திரிகை நிர்வாஹமும் என்னிடம் ஒப்படைத்தது தங்களுக்கு என் மேலுள்ள மட்டற்ற நம்பிக்கையையும் விசேஷித்து எதிர் பார்ப்பதையும் உணர்த்துகிறதெனினும் இச்சேவைகளில் எனது திறமை தங்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்ற ஐயம் என் மனதில் இடம் பெறுகின்றது. ஆனால் பொதுக்காரியதர்சி பதவியிலிருந்து விலகினாலும் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு பலவகைகளில் உதவிய ஸ்ரீ A. ராகவராவ் அவர்களுக்கும் மற்றும் நிர்வாக ஸமிதி அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டின் மஹாஸம்மேளனம் திருச்சியில் பிப்ரவரி 20, 21-தேதிகளில் ஸ்ரீ த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, M.A., L.I.M. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீரங்கம் ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் தலைமையில் இயங்கிய மகாநாட்டு வரவேற்புக்குழு, மகாநாட்டை மிகச் சிறம்பட நடத்தியது. 20—2—54 அன்று காலை திருச்சி ஜில்லா ஆயுர்வேத ஸபையின் ஆண்டு விழாவும், மாலை முதல் நமது மகாநாடும் நடைபெற்றன. தினமணி உதவி ஆசிரியர் ஸ்ரீ A. G. வெங்கடாசாரியார் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தனர். ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி



அவர்களின் ஆயுர்வேதம்-ஸமூக வைத்யம் என்ற உபன்யாஸமும், மறுநாள் 21—2—55 காலை ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர் மகாநாடு கோட்டக்கல் ஆர்யவைத்யசாலை பிரதான வைத்யர் ஸ்ரீ S. வாரியர் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. பிறகு ஆயுர்வேத பாடதிட்டத்தைப் பற்றி சர்ச்சை நடந்தபின், பிற் பகல் 2 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. காரியதர்சியின் அறிக்கைக்குப் பின்னர் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப் பட்டன. தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் புதிய நிர்வாஹ ஸமிதி தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு தலைவர் பின்னுரையுடன் மகாநாடு இனிது முடிவடைந்தது. இம மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு எல்லாவித சௌகர்யங்களையும் சாப்பாடு உடன் வசதிகளையும கொடுத்து உதவிய ஸ்ரீரங்கம் ராயபாளையம் எஸ்டேட் அதிபர் அட்வொகேட் ஸ்ரீ M. V. கிருஷ்ண மூர்த்தி ராவ் அவர்களின் ஆயுர்வேதத்தில் சிரத்தையை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டுளளோம்.

7—3—54 அன்று கோட்டக்கல்லிலும், பிறகு முறையே 5—4—54, 25—4—54, 18—7—54, 19—9—54, 17—10—54, 26—12—54, 7—1—55, 4—3—55, 28—3—55 தேதிகளில் திருச்சியிலுமாக, ஆக 12 நிர்வாஹ ஸமிதிக் கூட்டங்கள் நடந்து இருக்கின்றன. கிரமமாக நிர்வாஹஸமிதியினரின் தீர்மானங்கள் செயலுறுக்கொண்டு வருகின்றன.

முக்கியமாக இவ்வருஷம் ஆஸவாரிஷ்ட விஷயமாக சென்னை சர்க்காரும், மத்ய சர்க்காரும் கொணர்ந்த பல நியமங்களை மாற்ற- அவர்களுக்கு நமது கோரிக்கைகளைச் சமர்பிக்க மஹாமண்டலத்தின் பிரதிநிதியாக நமது உபதலைவர் ஸ்ரீ V. ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் செய்துள்ள சேவை மகத்தானது.

இவ்வருஷத்திய நிதி நிலைமை கிரமமாக அபிவிருத்தி அடைந்திருந்தும், பொதுக்காரியங்கள் பலவற்றில் இவ்வருஷம் அதிகமாக செலவு ஏற்பட்டுள்ளபடியால், இவ்வருஷத்தில் சுமார் ரூ. 400/- வரை துண்டு விழுகின்றது. இதை அங்கத்தினர்களை அதிகமாக சேர்ப்பதாலும், எல்லா அங்கத்தினர்களையும் உரித்தான காலத்தில் தமது சந்தாவைச் செலுத்தும்படி செய்வதாலும் ஈடு செய்துவிடலாம் என நினைக்கிறேன்.

நமது மஹாமண்டலத்தை ரிஜிஸதர் செய்வது சம்பந்தமாக நிர்வாஹஸமிதி தீவிரமாக யோசித்துப் பொது சபையின் அங்கீகாரம் பெற்றபின் அதில் ஈடுபட நினைத்து அதைத் தள்ளி வைத்திருக்கிறது. அது விஷயமாகத் தங்களது உருவான யோசனைகளை அளிக்கக்கோருகிறேன்.

இவ்வருஷம் நாம் மேற்கொண்ட பல ஆயுர்வேத சேவைகளுக்கு பொருள் உதவி நன்கொடைகள் மூலம் அளித்த வைத்யர்கள் அனைவருக்கும் நமது நன்றி உரித்தாகும். இதில் முக்யமானப் பங்கை ஏற்றுப் பெரும் பொருள் உதவி செய்த ஆர்ய வைத்யசாலை (கோட்டக்கல்) நிர்வாஹிகளின் தாராள மனப்பான்மையை நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். மற்றும் வைத்ய சந்திரிகை நிர்வாஹத்தில் எனக்கு பூர்ண பலமளித்துதவிய அதன் ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீ மெ. ஸுந்தரராஜாசாரியார் அவர்களுக்கும், வழக்கம்போல் காரியங்களில் வழிகாட்டி உதவி நின்ற ஸ்ரீமான்கள் பி. எஸ். ராமசர்மா, வா. பா. நடராஜ சாஸ்திரீ, ஸ்ரீ A. ராகவ ராவ் முதலியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு இவ்வருஷ வரவு செலவு கணக்குகளைத் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.


திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெரு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.


# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## 1954—1955 வரவு செலவு இருப்பு திட்ட விவரம் (21—2—54 முதல் 10—6—55 வரை)

| வரவு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கையிருப்பு வருஷ ஆரம்பத்தில் | 155 | 6 | 5 |
| சந்தா | 720 | 0 | 0 |
| விளம்பர மூலம் வரவு | 745 | 0 | 0 |
| நன்கொடைகள் | 500 | 0 | 0 |
| புத்தக விற்பனை மூலம் | 14 | 4 | 9 |
| வட்டி (தமிழ்நாடு ஸெண்டிரல் பாங்கிலிருந்து) | 1 | 14 | 6 |
| ஸ்ரீ விலாஸம் பிரஸிற்கு கொடுபடவேண்டியது | 420 | 9 | 0 |
| | 2557 | 2 | 8 |

| செலவு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| தபால் செலவு | 162 | 11 | 9 |
| அச்சு செலவு (பொது) | 98 | 6 | 3 |
| சென்னை ஆபீஸ் செலவு | 87 | 0 | 0 |
| வைத்யசந்திரிகை | 1466 | 13 | 0 |
| இதர செலவு (பலவகை) | 145 | 14 | 3 |
| நிர்வாஹ ஸமிதி கூட்ட செலவு | 28 | 7 | 0 |
| அ. பா. ஆ. ஸம்மேளன இணைப்புச் சந்தா | 25 | 0 | 0 |
| 53—54 வருஷ பாக்கி-வடிவேல் பிரஸிற்கு | 60 | 0 | 0 |
| ஆஸவாரிஷ்ட டெபுடேஷனுக்கு | 454 | 8 | 0 |
| விளம்பர செலவு | 16 | 0 | 0 |
| ரொக்கக் கையிருப்பு | 0 | 3 | 11 |
| பாங்கிலிருப்பு | 12 | 2 | 6 |
| ஆக மொத்தம் | 2557 | 2 | 8 |

ஆக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூற்றைம்பத்திஏழும் அணு இரண்டும் பைசா எட்டும்.

கணக்குகள் சரியாக இருக்கின்றன.

ஏ. ராகவ ராவ்,
தணிக்கையாளர்.

எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ,
பொதுக்காரியதர்சி.

வி. ஆர். ஸுப்ரமண்ய அய்யர், பொக்கிஷதார்.

**1955—56 வருஷத்திய**

# மஹாமண்டல நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்கள்

**தலைவர்:—**

வைத்ய வாசஸ்பதி. ஸ்ரீ. பி. எஸ். ராமசர்மா. கரூர்

**உபதலைவர்கள்:—**

ஸ்ரீ. த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ. எம். ஏ., எல். ஐ. எம். சென்னை. ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ வி. ஸுப்ரமண்ய அய்யர். ஸ்ரீரங்கம்.

**வைத்யசந்திரிகை-ஆசிரியர்:—**

பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர், ஸ்ரீரங்கம்.

**பொதுக்காரியதர்சி, வைத்யசந்திரிகை உதவி ஆசிரியர், பிரசுரதாரர்:—**

ஸ்ரீ. எஸ். வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரீ வைத்யவிசாரத, திருச்சி.

**உதவிக் காரியதர்சிகள்:—**

ஸ்ரீ. கே ராகவன். எல். ஐ. எம்., சென்னை.

ஆர்ய வைத்ய ஸ்ரீ பி. வி. ஹரிஹரசர்மா, கரூர்.

**பொக்கிஷதார்:—**

ஸ்ரீ V. R. ஸுப்ரமண்ய அய்யர், திருச்சி.

**அங்கத்தினர்கள்.**

பண்டித. ஸ்ரீ. எஸ். நாராயண அய்யங்கார், கரூர்.
ஸ்ரீ. வா. பா. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய-திருச்சி.
ஸ்ரீ. எஸ். ஆர். வரதராஜுலு நாயுடு. ஸ்ரீரங்கம்.
ஸ்ரீ. ஆர். வி. ராம அய்யர், வைத்ய விசாரத. கரூர்.
ஸ்ரீ. பி. விசுவநாத அய்யர் வைத்யவிசாரத புதுக்கோட்டை
ஸ்ரீ. கே. வைத்யநாத சாஸ்திரீ, புதுக்கோட்டை
ஸ்ரீ. வி. எஸ். வெங்கட ஸுப்ரமண்ய சாஸ்திரீ. வைத்ய விசாரத, சென்னை.
ஸ்ரீ. எம் வி. ஸுப்ரமண்ய சர்மா, வைத்யவிசாரத சென்னை.
ஸ்ரீ. ஸி. எம். சிவஸுப்ரமண்ய அய்யர், ஏ. எல். ஐ. எம் வைத்ய விசாரத. சென்னை.
ஸ்ரீ. பி. வைத்யநாதன், வைத்ய விசாரத, சென்னை.
ஸ்ரீ. பி. எஸ். ஸ்ரீனிவாஸ அய்யர், வைத்ய விசாரத, சிதம்பரம்.
ஸ்ரீ. ஏ. பி. வெங்கடேசன் திண்டிவனம்.



ஸ்ரீ. எம் சங்கரவைத்யர். தஞ்சை
ஸ்ரீ. எம். வி. லக்ஷ்மண சாஸ்திரீ. திருவாரூர்.
ஸ்ரீ. வி. ஆர் லக்ஷ்மீ காந்தசர்மா, வைத்ய விசாரத, கும்பகோணம்.
ஸ்ரீ. கே. ஷாரடி வைத்ய விசாரத, மதுக்கூர். தஞ்சை.
ஆர்யவைத்ய ஸ்ரீ. என். ராமவாரியர் மதுரை
ஸ்ரீ. பி. எஸ். அனந்த ராமசர்மா, வைத்ய விசாரத பொள்ளாச்சி.
ஸ்ரீ. கே. ஆர். ஸுப்பாராவ். ஈரோடு.
ஸ்ரீ டி. ஸ்ரீனிவாஸ அய்யர், வைத்ய விசாரத, ராமேசுவரம்.
ஸ்ரீ. கே. ஏ. நடேசன், ஆட்டையாம்பட்டி சேலம்,
ஸ்ரீ. எஸ். வெங்கடராவ். செவ்வாய்பேட்டை சேலம்
ஸ்ரீ. ஆர். கே. பழனியப்பா. செவ்வாய்பேட்டை, சேலம்.
ஸ்ரீ. டி. எம் சங்கரன். சேலம்
ஸ்ரீ. எம். ராஜுபிள்ளை, சேலம்.

மற்றும் மிகுதியிருக்கும் மூன்று ஸ்தானங்கள் வட ஆற்காடு, திருநெல்வேலி ஜில்லா வைத்யர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அங்குள்ள வைத்யர்களைக் கலந்துகொண்டு மேற்கண்ட ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யப் பொதுக்காரியதர்சிக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

# சேலம் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

**தீர்மானம் 1:**

(அ) ஆயுர்வேதக் கல்வியையும் ஆயுர்வேதம் சம்பந்தப்பட்ட நிர்வாஹங்களையும் தனித்து கவனிக்க ஆயுர்வேத வைத்யர்கள் மட்டு மடங்கிய மத்ய ஆயுர்வேத கவுன்ஸில் ஒன்றை நிறுவி, அதனிடம் ஆயுர்வேதத்திற்கான சகல நிர்வாஹப் பொறுப்புகளையும் ஒப்படைக்குமாறும்,

(ஆ) தற்சமயம் அலோபதி வழியில் நடந்துவரும் ஆயுர்வேத ஆராய்ச்சி முறையை நிறுத்தி ஆயுர்வேத வழியில் ஆயுர்வேதத்தை ஆராய்ச்சி செய்யுமாறும்,

(இ) பம்பாய் ராஜ்யத்தில் புகுத்தப்பட்டுள்ள சுத்த ஆயுர்வேத திட்டத்தை மற்ற ராஜ்ய சர்க்கார்களும் ஏற்று நடத்துமாறு ராஜ்ய சர்க்கார்களுக்கு உத்திரவிடுமாறும்,

(ஈ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்தியா முழுவதும் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை நிறுவியும், தகுந்த ஆயுர்வேத நிபுணர்களின் மேற்பார்வையில் நல்ல கல்வி திட்டத்தை வகுக்குமாறும்

மத்ய சர்க்காரை இம் மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது.

**தீர்மானம் 2 :**

(அ) ஒவ்வொரு ஜில்லாத் தலைநகரத்திலும், ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தவும், அவ்விதம் செய்ய முடியாவிடில், ஒவ்வொரு தலைமை ஆஸ்பத்திரியிலும் பத்து படுக்கைகள் ஆயுர்வேத முறையில் வைத்யம் செய்து கொள்வோருக்கு ஒதுக்கித் தனி ஆயுர்வேத சிகித்சைக்கு வழி வகுக்குமாறும் [இவ்விதம் செய்தால் தான் பொது மக்கள் ஆயுர்வேதத்திடம் நம்பிக்கை கொண்டுள்ளதை நிர்வாஹத்தினர் அறியமுடியும்]

(ஆ) சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியில் தற்சமயம் அமுலிலுள்ள பாடதிட்டத்தை மாற்றி பம்பாய் அரசாங்கம் கைக்கொண்டுள்ள சுத்த ஆயுர்வேத திட்டத்தை ஏற்குமாறும்,

(இ) நல்ல தகுந்த ஆயுர்வேத நிபுணர்களையே அரசாங்க இந்திய வைத்யக் கல்லூரியின் தலைவராகவும், இந்திய வைத்ய இலாகாத் தலைமை அதிகாரியாகவும் நியமிக்குமாறும்,

(ஈ) ஒரு காலத்தில் உத்தேசிக்கப்பட்டு பிற்பாடு கைவிடப்பட்ட குருகுல முறையைத் திருப்பி ஏற்று, அவ்விதம் குருகுல முறையில் பயிற்சி பெற்றவர்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்யுமாறும்,

(உ) பதினைந்து வருஷங்களுக்கு மேற்பட்ட நல்ல தொழில் அனுபவமுள்ள வைத்யர்களைப் பதிவு செய்யுமாறும்,

(ஊ) ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரத்திலுள்ள வைத்ய சாலைகளில் ஏ வகுப்பு வைத்யர்கள் கிடைக்காதிருப்பின் ஆஸ்பத்திரிகள் மூடும் வழக்கத்தை விட்டு நல்ல பி. வி. வகுப்பில் பதிவான வைத்யர்களை நியமிக்குமாறும்,

சென்னை ராஜ்ய சர்க்காரை இம் மகாநாடு கோருகின்றது.

**தீர்மானம் 3 :**

அகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத்திடம், சாஸ்திர ஆராய்ச்சிக்கு உதவுமாறு ஸம்ஸ்கிருதத்திலும், பிரசாரத்திற்கு உதவ ஆங்கிலத்திலும் தனித்தனியாகப் பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்துமாறு இம் மகாநாடு கோருகின்றது.



**தீர்மானம் 4 :**

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தை தனிப்பட்ட ஸ்தாபனமாக ரிஜிஸ்தர் செய்யவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மஹாமண்டலப் பொதுக்காரியதரிசிக்கு அதிகாரமளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 5 :**

ஆயுர்வேத முன்னேற்றத்திற்கான வழிகளை வகுத்து பொது ஜன சேவையில் வைத்யர்கள் ஈடுபட அப்யுதயஸமிதி என ஒரு உபகமிட்டி கீழ் கண்ட ஆரம்ப அங்கத்தினர்களுடன், மேற் கொண்டு தேவையான அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ளும் அதிகாரத்துடன் நிறுவத் தீர்மானிக்கப்பட்டது.

1. ஸ்ரீ த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி, சென்னை (நிர்வாகி)
2. ஸ்ரீ எஸ். வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.
3. ஸ்ரீ கே. ராகவன், சென்னை.

---

**மகாநாட்டுச் செய்தி.**

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் 20 வது மகாநாடு சேலத்தில் கோவாபரேடிவ் ரெஸ்டுஹவுஸ் கட்டத்தில் சென்ற 12, 13-6-1955 தேதிகளில் நடைபெற்றது. கரூர் வைத்ய வாசஸ்பதி பண்டித ஸ்ரீ. P. S. ராம சர்மா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

12—6—55 அன்று காலை ராஜேந்திர சத்திரத்திலிருந்தும் பல முக்கிய வீதிகள் வழியாக தலைவர் அவர்களும் எல்லா வைத்யர்களும் பாண்டு மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக மகாநாட்டுப் பந்தலுக்கு 8 மணிக்கு அழைத்துவரப்பட்டனர். நானூறுக்கு மேற்பட்ட வைத்யர்கள் மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். ராஜேந்திர சத்திரத்திலேயே காலை உணவு உபசாரம் மகாநாடுப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்டது.

அன்று விடியற்காலையிலிருந்து சென்னை வழியாக நமது மகாநாட்டைத் திறந்து வைப்பதற்காக சேலத்திற்கு வரும் ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன் (மத்ய சுகாதார உதவி மந்திரி)

அவர்களை சேலம் ஜங்ஷன் ஸ்டேஷனில், ஸ்ரீமதி S. V. ராமஸாமி அவர்கள் தலைமையில் மகாநாட்டு வரவேற்புக் குழுவினரும், மகா மண்டலப் பொதுக்காரியதர்சியும் சென்று வரவேற்றனர். அதே சமயம் பங்களூரிலிருந்து மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள வந்த அகிலபாரத ஆயுர்வேத மகாசம்மேளனத் தலைவர் ஸ்ரீ பார்த்தநாராயண பண்டிட் அவர்களையும் வரவேற்றனர்.

காலை 8-மணிக்கு பிரார்த்தனையுடன் தேசியக்கொடி மகாமண்டலத்தலைவர் ஸ்ரீ த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டது. சுதந்தர பாரதக் கொடியினை பறக்கவிட்டதால் புராதன சுதந்திரபாரதத்தின் பாரம்பரை பொக்கிஷமான ஆயுர்வேதத்தை சரியான அஸ்திவாரத்தில் நிலைநாட்ட நமக்கு எல்லாம் வல்ல பரமாத்மா சக்தி அளிப்பாராக என்று கூறி ராதாகிருஷ்ண சாஸ்திரி கொடியை ஏற்றுவித்தார்.

மகாநாட்டில் கலந்துகொண்ட ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன், மற்றும் வைத்யர்கள் நகரப்பிரமுகர்கள் அனைவரையும்



வரவேற்று வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ T. S. பட்டாபிராமர் M.P. அவர்கள் பேசியதாவது ஜனங்களுக்கு விருப்பமான எவ்விதமான வைத்ய முறைக்கும் சர்க்கார் சரியான பாதுகாப்பு அளித்து வளர்க்க வழி செய்ய வேண்டும். ஆயுர்வேதம் ஜனங்களுக்கு மிகவும் உயர்ந்த சேவையைச் செய்துவருகிறது. அதற்கான பாதுகாப்பில் சர்க்கார் சற்று மாற்றாந் தாய் மனப்பான்மை யுடனிருப்பது உகந்ததல்ல.



நம் தேசத்தில் ஐந்துலட்சம் கிராமங்கள் உள்ளன. இவற்றில் 30,000 டாக்டர்கள் தான் உள்ளனர். இவை போதாது. ஒரு கிராமத்திற்கு ஒரு பள்ளி, ஒரு வைத்தியராவது தேவை. வைத்தியக் கல்லூரிகள் நகரங்களில் குறைவாக யிருக்கின்றன. ஆகையினால் ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டம் பெற்ற டாக்டர்கள் கிடைப்பது சாத்யமல்ல. ஆயுர்வேத முறை சரிவர ஆதரிக்கப்படுவதில்லை யென்று கருதப்படுகிறது, ஆங்கில முறைக்கும ஆயுர்வேத முறைக்கும் போட்டா போட்டி கிடையாது. ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருக்கவேண்டும். ஆயுர்வேதம் 5 வருஷம் குருகுல வாசமாயிருந்து கறகப்படவேண்டும், மற்றும் அகில இந்திய ஆயுர்வேத கவுன்சில் ஒன்றை நிறுவி இதன் மூலமாய் ஆராய்ச்சிசெய்து ஆயுர்வேதமருந்துகளின் தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும். சேலம ஜில்லாவில் மலைகள் ஏராளமாக உள்ளன. இவற்றில் பல மூலிகைகள உள்ளன. ஒரு கார்ப்பரேஷன் நிறுவி ஆயுர்வேத வைத்தியத்திற்கு தேவையான மூலிகைகளை எப்பொழுதும் கிடைக்கும் படிசெய்ய சர்க்காரும் உதவி புரிய வேண்டும்.

இதன் பின் ஸ்ரீமதி மரகதம் அவர்களுக்கு தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் சார்பில் ஸ்ரீ த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார், கனம் மந்திரி அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசினர். இதற்குப் பதிலளித்தும் மந்திரி அவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டதற்கு நன்றி கூறியும ஸ்ரீ பார்த்தநாராயண பண்டிட் (அகிலபாரத ஆயுர்வேத மகாநாட்டுத்தலைவர்) அவர்கள் ஆயுர்வேத வைத்யர்களைப் பற்றியும், ஆயுர்வேதத்தைப் பற்றியும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற ஆயுர்வேதவைத்யர் ஒருவரை அரசாங்கம் ஆலோசகராக நியமித்தால் கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்ட குழப்பங்களை தீர்ந்து விடும் என்றும் கூறினர்.

பிறகு தலைவர் ஸ்ரீ ராமசர்மா அவர்கள் தமது உரையை நிகழ்த்தினர். பிறகு மூலிகைக் கண்காட்சியை சேலம் வியாபாரி ஷேட் பொதுக்காரியதர்சி ஸ்ரீ M.V. கோபால செட்டியார் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில், சேலம் போன்ற இடங்களில் கொல்லிமலை, ஏற்காடு, செவராயர்மலை போன்ற மூலிகை தாதுப் [illegible]

ஸ்ரீமதி மர[illegible]

பொருள்கள் மிகுதியாகக் கிடைக்குமிடத்தில் ஆயுர்வேத ஔஷதங்கள் தயாரிப்புசாலை ஒன்று மிகப் பெரிதாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

பிறகு தமிழ்நாட்டில் ஆயுர்வேத வைத்யசாஸ்திர-அத்யாபனத்தில் தலைசிறந்தவரும் சிறந்த சிஷ்ய ஸம்பத்து பெற்றவருமான ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் அவர்களுக்குப் பொன்னாடை போற்றி அவர்களையும் மஹாமண்டலத்தையும் கௌரவிக்கும் பணியை ஸ்ரீரங்கம் ஆயுர்வேத சேவாப்பிரவீண ஸ்ரீ V. ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் செய்தார். பிறகு ஸ்ரீ வா. பா. நடராஜ சாஸ்திரீ ஆயுர் வேதாசாரிய அவர்கள் ஸ்ரீமான் நாராயண அய்யங்கார் அவர்களது ஆயுர்வேத மகாமண்டல சேவையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், வைத்ய சந்திரிகை பத்திரிகையை ஆரம்பித்து பல ஆண்டுகள் நடத்தி அதை மகாமண்டலமும் அதன் மூலமாக ஆயுர்வேதமும் முன்னேறவேண்டுமென்ற ஸத் ஸங்கல்பத்துடன் அதை மகாமண்டலத்திற்கு அளித்துப் பின்னும் அதற்குத் தொடர்ந்து சேவை செய்து வருவதையும், சாஸ்திர சர்ச்சைகளிலும், சாஸ்திர அத்யாபனத்திலும் அவர்கள் கடைபிடிக்கும் உயர்ந்த தனி வழியையும் குறிப்பிட்டு, அன்னார் நீண்ட ஆயுள் வாழ்ந்து நமக்கு மார்க்கதர்சிகளாக இருக்க வேண்டும் என்று கோரினர்.

பிறகு 2-30 மணி முதல் 4-30 மணிவரை ஸ்ரீராமசர்மா அவர்கள் தலைமையில் விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 4-30 மணிக்கு நடந்த சென்னை ராஜ்ய ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர் மகாநாட்டை ஸ்ரீமான் பார்த்த நாராயண பண்டிட் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். கோவை ஆர்ய வைத்ய பார்மஸித் தலைவர் ஸ்ரீ P. V. ராமவாரியர் அவர்கள் தலைமை வகித்தார்கள். அதன் பின் கோவை அகஸ்தியர் சித்த வைத்ய சங்கத்தலைவர் ஸ்ரீமான C. K. குமாரஸாமிபிள்ளை அவர்கள் சித்த வைத்யத்தைப்பற்றிப் பேசினார்கள். தலை ஸ்ரீ வாரியர் அவர்களின் பின்னுரையுடன் கூட்டம் இ முடிவடைந்தது.

மறுநாள் காலை ஆரம்பமான ஆராய்ச்சிப் பேச்சுகள் ஸ்ரீ C. K. குமாரஸாமி பிள்ளை அவர்கள் தலைமை வகி



வைத்யர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் மகாமண்டலப் பொதுக்காரியதர்சியின் ஆண்டறிக்கை படிக்கப்பட்டபின் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது புதிய நிர்வாஹ ஸமிதித் தேர்தலும் தீர்மானங்கள் நிறைவேறுதலும் நடந்தன.

மகாநாட்டின் பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட தினமணி உதவி ஆசிரியர் ஸ்ரீ A. G. வெங்கடாசாரியார் அவர்கள் ஒரு சிறிய சொற்பொழிவாற்றினர். அதன் சாரமாவது–சென்ற வருஷம் மகாநாட்டை ஆரம்பித்துவைக்கும் பாக்யம் எனக்கு ஏற்பட்டது. இந்த வருஷமும் அகஸ்மாத்தாக இவ்விடம் வர நேரிட்டதின் பயனாக மகாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. சர்க்காரை எதிர்ப்பார்ப்பது சரியல்ல. பொது மக்களின் ஆதரவைப் பெறவேண்டும். ஆயுர்வேத வைத்தியர்கள் ஒரு கஷ்டமான சூழ் நிலையிலிருக்கிறார்கள். தொழிலிற்கு ஆபத்து நேரிட்டிருக்கிறது அரசாங்க மந்திரிகள் பொதுப்படையாக பேசுவார்கள். வைத்யர்கள் ஜில்லாக்களில் ஒரு பிர்க்காவை எடுத்துக்கொண்டு ஒரு மெடிகல் யூனிட்டாக வேலை செய்ய வேண்டும். தேசிய விஸ்தரிப்பு சமுதாய நல திட்டம் போன்ற பகுதிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அங்கு தங்கள் சேவையை பொது மக்களுக்கு அளிக்கவேண்டும். தடபுடலாக மோட்டார் வான் போன்றவைகளை வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. 10 முதல் 20 கிராமங்களுக்கு தங்கள் சேவையை அளிக்க முன்வரவேண்டும். மேலும் ஜில்லாக்களில் ரோட்டரி சங்கங்கள், சமூக சேவை என்பதின் அடிப்படையில் சில குறிப்பிட கிராமங்களில் வைத்ய வசதி செய்து வருகிறார்கள். அரசாங்கத்தின் பிரமுகர்களை நாடித் தாங்கள் சேவையை செய்ய ஒரு வாய்ப்பைப் பெறவேண்டும். அவர்களால் ஓரளவு பலனடையலாம். சமுதாய நலத் திட்டங்களில் இம் மாதிரியான வேலை செய்வதற்கு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலத்தை உருப்படியான திட்டத்துடன் அணுகினால் அவர் இதை ஆதரிப்பார். இரண்டு மூன்று வருஷங்கள் சமூக நல திட்டப்பகுதிகளில் வேலை செய்தால் அவர்களுக்கு சமூக க்ஷேம நல போர்டிலிருந்து பண உதவியும் கிடைக்கலாம். இந்திய வைத்ய கல்லூரியில் பட்டப் படிப்பிற்கு பிந்திய மேற்படிப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தலைவர் பின்னுரைக்குப் பின்னர் நன்றி தெரிவித்தபின் மகாநாடு இனிது முடிந்தது.

இம் மகாநாடு இவ்வளவு சுமுகமாகவும் திருப்திகரமாகவும் நடந்தேறியதற்கு முக்கியகாரணமான வரவேற்புக் கமிட்டியினருக்கு நன்றிகூற நம்மிடமுள்ள வார்த்தைகள் போதாது. மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலே வேற்றுமைகளைக் கிளறிவிட்டு வேடிக்கைப் பார்த்து நிற்கும் சில வைத்யர்களுடைய தொந்தரவுகளையும் பொருட்படுத்தாது கால தேசவர்த்தமானங்களை எதிர்த்துப் போராடி அவர்கள் மகாநாட்டை நன்கு நடத்திக் கொடுத்தது அவர்களது மனோபலத்திற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற உதாரணச் செயலாகும்.

---

## மகாநாட்டை பற்றி பத்திரிகைகள்—

### நாட்டு வைத்தியம்.

பாரதத்தின் வைத்திய முறையான ஆயுர்வேதத்தின் மறுமலர்ச்சிக்குரிய முறைகளைச் சர்க்கார் கைக்கொள்ளத் தவறி விட்டனர் என்று சமீபத்தில் சேலத்திலே கூடிய தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலப் 20-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த வைத்திய வாசஸ்பதி, பண்டித பி. எஸ். ராம சர்மா குறிப்பிட்டார். இந்திய மக்களின் வாழ்வுக்குக் கைத்தொழில் துறைகள் அபிவிருத்தி அடைய வேண்டியது எவ்வளவு அவசியமோ, அது போலவே மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு வைத்தியத் துறையில் அபிவிருத்தி ஏற்பட வேண்டியது அத்தியாவசியம். முக்கியமாக, லட்சக் கணக்கான இந்திய கிராமங்களில் வாழும் கோடிக் கணக்கான ஜனங்கள் நோய் நொடிகளிலிருந்து விடுதலை பெற்று ஆரோக்கிய வாழ்வு நடத்துவதற்குற்ற தேசிய வைத்திய முறைகளான சித்த வைத்தியமும், ஆயுர்வேதமும் அபிவிருத்தி அடையும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் முக்கிய கடமையாகும். சித்த வைத்திய முறையின் சரியான மதிப்பை இன்னும் நமது நாட்டில் பலர் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டுக்கே சிறப்பாக அமைந்த இந்த சித்த வைத்திய முறை, பல மகான்களால் பயிலப்பட்டு அற்புதமான மூலிகைகளால் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. சங்கேதச் சொற்கள் என்று கூறப்படும் சில குறியீட்டுச் சொற்களைக் கையாண்டு சித்த வைத்திய நூல்கள் எழுதப்பட்டிருப்பதால், இவற்றைப் புரிந்து கொள்வதில் பல குழப்பங்கள் நேர்கின்றன என்பது உண்மைதான். என்றாலும் இந்த வைத்திய முறை அற்புதமான சாதனைகளோடு கூடியது என்பதில் சந்தேகமேயில்லை. இந்த சித்த வைத்தியத்தையும் ஆராய வேண்டியது நமது அரசாங்கத்தின் கடமையாகும். — கல்கி.

18838

---

### மதராஸ் ஸ்டேட் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,

X 185, லேட்டிஸ் பிரிட்ஜ் ரோட், அடையாறு. மதராஸ். 20

**பிரஸிடெண்ட் :— வைத்யரத்ன கேப்டன்**
**G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.**

1. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசிய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ஸ்டேட் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் 1944ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் ஷை சொஸைட்டியில் மெம்பராகச் சேரலாம்.

ப... டி சங்கத்தின் பங்கு ஒன்றுக்கு ரூ 5-ம் பிரவேச கட்டணம் எடு...ணு 0—4—0 ம். ஒரு மெம்பர் 1000 பங்குகள் வரை எடுத்துக் கொ...ள்ளலாம்.

பகுதி தேசீய வைத்தியர்கள் யாவரும் மேற்கண்ட சொஸைட்டியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைட்டியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முல்

### — எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னாவளி :—** ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் பிரசுரிக்கப் பட்டவை. கவர்ன்மெண்டாரால் அனுமதிக்கப்பட்ட வைத்திய முறைகளும், மற்ற முறைகளும், மருந்துகளின் தன்மைகளும், குணங்களும் அடங்கியவை. ஆங்கில பிரதி விலை ரூ 6. தெலுங்கு பிரதி ரூ 6—8—0. தபால் கட்டணம், பாக்கிங் ஒவ்வொன்றுக்கும் முறையே ரூ 1—2—0 பிரதி விலையுடன் முன் பணமாக அனுப்பவேண்டும்.

2. **யூனானி பார்மகோபியா :—** இது யூனானி வைத்திய முறைகளையும், உபயோகங்களையும் குறிப்பிடும் நூல். ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டவை. பிரதி ஒன்றுக்கு ரூ. 3. தபால் கட்டணம் பிரத்யேகம்.

அடையாறு. }
மதராஸ்-20 }

Y. கொண்டல் ராவ், எல். ஐ. எம்.
செக்ரிடேரி.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினுல் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்.

❋

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)


Printed at the Srivilasam Press, Srirangam and Published by
S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam,
Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruch